-261-

# அமிர்தவசனி

தெய்வீக மாதப் பத்திரிகை

-Page - 261-


| | | |
|---|---|---|
| மலர் : 16 | குரோதி ஸு புரட்டாசி மீ | வருட சந்தா |
| இதழ் : 6 | செப்டம்பர்—அக். மீ 1964 | ரூ. 3-00. |




விடைத்தேவர் மாயப் பசுவை வீழ்த்தியது.

சித்திர விளக்கம் 30. பக்கம் : 244.

ACC. No. 9886

## பொருள் விளக்கம்


பக்கம்

1. கல்லும் சொல்லும் (திருப்புகழ்மணி) ... 241
2. மாயப் பசுவை வதைத்தது (கி. வா. ஜகந்நாதன்)... 244
3. 'சீர்சிறக்கு மேனி'—(பழமுதிர் சோலை) திருப்புகழ் விரிவுரை (குகஶ்ரீ) ... 247
4. குமாரஸ்தவ விளக்கம் (திருப்புகழ் சதுரர் சே. த. ராமலிங்கம் பிள்ளை, B. A., B. T.) ... 256
5. பரம சௌலப்யம் (கி. வா. ஜ.) ... 259
6. தென்னாட்டுத் தலதரிசனம், (தணிகைமணி வ. சு. செங்கல்வராயபிள்ளை, M.A.) 262
7. முக்கா வேலை (ரஸபதி) ... 268
8. விநாயக சதுர்த்தி (ஆ. கி. ரங்கராஜன்) ... 275
9. விடையவர் தாள் (K. S. சுந்தரமூர்த்தி) ... 280
10. வள்ளலார் கண்ட சமரச சன்மார்க்கம் (தர்மா ராஜாராமன்) ... 284
11. Breathe and Build (*Thiruppugal Mani*) 287



Grams: MURSOKS. Phone: 51388

"நாவல ஞான மனோலா நமோநம
பால குமார சுவாமி! அருள்தாராய்!"

வெண்மையான சலவைக்கு

ஒயிட் ஹார்ஸ் சோப்

தயாரிப்பாளர்: D. பங்காரு செட்டியார்,
நேஷனல் இன்டஸ்ரீஸ்,
220, T. H. ரோட், தண்டையார்பேட்டை, சென்னை-21

அமிர்தவசனி
தெய்வீக மாதப்பத்திரிகை

எல்லோரும் இன்புற் றிருக்க நினைப்பதுவே
அல்லாமல் வேறொன் றறியேன் பராபரமே.

ஆசிரியர் : சு. முத்துஸ்வாமி

| மலர் 16 | குரோதி ஞு புரட்டாசி மீ<br>செப்டம்பர்—அக்டோபர் 1964 | இதழ் 6 |
|---|---|---|

## கல்லும் சொல்லும்

(திருப்புகழ்மணி)

சொல்லின் வன்மையால் கல்லும் கரைந்துவிடும். சொல்லின் திண்மையால் சொல்லே கல்லாய் பாய்ந்து வினைகளை விரட்டித் துணை பயந்திடும். சொல்லின் தீமையால் சொல்லே கல்போன்ற தீமை விளைத்திடும். சொல்லினில் ஜோதி காண்பார் கல்லிலும் ஜோதி காண்பார். நமது புராணங்களில் கூறிய சரித்திரங்கள் இவைகளுக்குச் சான்றாகும்.

வள்ளி மாதா சிருஷ்டி என்ற தினைப்புனத்து, இதய ஸ்தானமாய் அறியப்பட்ட பரண்மிசை ஏறி, ஆசாபாசமான பறவைகள் வந்து ஜீவராசிகளாம் தினைகளைக் கொத்திக் கடியாது காப்பாற்ற வேண்டு மென்ற கருணையால், ஆ! ஓலம்! ஆலோலம் என்று

---

தூயகுணம், தூயமனம், தூய மொழியுடையோர்
நேயம், அடியேற்கு நேரஅருள் நின்மலனே!

கூவி, புனம் காத்த பெருமையைக் கந்தபுராணம் கூறும். பிண்டத்தில் உதவுவார் அண்டத்திற்கு உதவுவார் என்று உணர்ந்தாள். கவண் ஒன்று கையேந்தி அதில் கல் வைத்து பறவைகளை விரட்டினாள். ஓங்காரமெனும் கவண்தான் அவள் கொண்ட கவண். 'முருகா' எனும் திவ்ய நாமமே அவள் உபயோகித்த கல். முருகா எனும் நாமத்தைக் கல்லாகக் கருதி ஓங்காரம் எனும் கவணில் ஏற்றி ஆசா பாசக் காமக் குரோதங்களாகிய பக்ஷி ஜாதிகளை விரட்டினின்றாள் வள்ளி. அது காப்பதற்குச் சொல்லும் கல்லாய் விட்டது. கல்லை வைத்தடித்தால் விரட்டப்படாத வெவ்வினைகள் எல்லாம், சொல்லை வைத்தடித்தால் சிதறிப் போய்விடும். இதனாலல்லவோ மொழிக்குத் துணை முருகா எனும் நாமம் என்று அருணகிரி பாடியதும். அஹிம்ஸையின் உயிர்நிலை கல்லைக் கரைத்திடும் சொல். நெஞ்சக் கனகல்லு நெகிழ்ந்திடவே யன்றோ அருணகிரி அனுபூதி பாடியதும். சிவாயநம வென்று சொல்லிக் கொண்டிருந்தாராம் ஸ்ரீ மாணிக்க வாசகப் பெருமான். அந்த சொல்லினில் உறைந்த ஜோதியாய் விளங்கும் சிவபெருமான் உதயமாகி, மனமாகிய கல்லைப் பிசைந்து கனியாக்கி, தன் கருணை வெள்ளத்தழுத்தி வினை கடிந்தானும். பஞ்சாக்ஷரம் எனும் சொல்லின் வன்மையும், திண்மையும் போற்றினார். கல்லும் கனியானது அதாவது பழமானது, ஓர் பழஞ்சொல்லின் வன்மைதானே. 'சிவப்பழம்' என்று

---

விருப்பு வெறுப்புகள் விளையாத வண்ணம்,
இருப்பாகி என்னுளத்தில், என்றுமிரு எம்மானே!

சொல்வது உலக இயல்பு. சொல் தூய்மை உள்ள தானால், ஜோதி உடையதானால், நன்மையும் இனிமை யும் பூண்டதானால், சொல்லே பழமன்றோ. பழத்தை நாவில் இட்டால் ருசிப்பதுபோல், சொல்லை நாவிலிட் டால் சில சொற்கள் தித்திக்குமானால் அச்சொற்களும் பழம் தானே. பழஞ்சொல் ஒன்று கல்லைக் கனியாக் கியதென்றால், கல் ருசிக்காத காய் என்றேதான் கொள்ளவேண்டும். 'சொல்லச் சொல்லத் தித்திக்குமே, அப்பா உந்தன் நாமரஸம்' என்ற முருகதாஸர் அனுபூதியில் நிறைந்து கிடக்கும் சொல்லெல்லாம் பழஞ் சொற்களதான். கல்லான மனத்தை நெகிழ வைக்கும் சொற்கள். சிவரஸம் ஒழுகும் தேனொத்த நிறைந்த சொற்கள். சொல்லால் கல்லான மனமும் கனியாய்விடும். ஏன்! 'ராமா' என்று ஓதிக் கொண்டி ருந்த அகல்யையின் மேன்மை யென்னே! சொல்லால், கனி மாத்திரமல்ல, கன்னியுமாய் மாறிற்றன்றோ!

முன்னொருகால் நாரத பகவான் கையில் பிடித்த வீணையுடன் திடீரென்று ஒரு காட்டில் இறங்கிவிட் டார். ஏன்! அருமையான கானம் காதில் விழுந்தது. தொண்டு கிழமாய் நின்ற ஸ்ரீ ஆஞ்சநேய மூர்த்தி ராம பஜனம் செய்தாராம். அந்த இசைச் சொல நாரதரை இழுத்துவிட்டது. ஆஞ்சநேயர் பஜனம் முடிந்ததும் ஸ்ரீ நாரதப் பிரம்மம் புறப்பட்டார். வீணையை எடுக்க முடியவில்லை. கற்பாறை நெகிழ்ந்த காலத்தில் அத னுள் அகப்பட்டுக் கொண்ட வீணை, கற்பாறை திணிவு

---

துன்பந்தான் நாயேனைத தூயவன் ஆக்குமெனில்,
அனபாய் அடியேன், அதையேற்கச் செய்வாயே!

பட்டவுடன் வீணையையும் பற்றிக் கொண்டதென்று உணர்ந்தார். மறுபடியும் பாறையை நெகிழச்செய்ய, ஸ்ரீ நாரதர் பாடினார். வீணையை மீட்கவேணு மென்ற குறியைக் கொண்டதனால் நாரத பஜனையில் பாறை இளகவில்லை. மறுபடியும் ஆஞ்சநேயர் ராம பஜனை செய்து கொண்டிருக்கையில் பாறையும் இளகி யது. நாரதரும் வீணையை மீட்டுக்கொண்டார் என்பது புராணம். "குறியைக் குறியாது குறித்து" பஜனை செய்தால் ஏன் பாறையும் இளகாது? மானிட நெஞ்ச மாகிய கற்பாறைகள் உருகி அன்பு வெள்ளம் எடுக்க வேண்டில், ஆற்றல் பொருந்திய சொற்களால்தான் முடியும். அன்பும், பக்தியும், குறியற்ற பஜனையும், அறிவற்ற பண்பும், வேற்றுமையெனும் திரிபற்ற உள்ளமும் தேக்கி சுகம்பெற வேண்டுவீரேல் ஆண்ட வன் நாமத்தை ஓதுவீர்!

---

சித்திர விளக்கம்—30

## மாயப் பசுவை வதைத்தது.

[ கி. வா. ஜகந்நாதன் ]

தாம்விட்ட நாகம் பாண்டியனுடைய அம்புக்கு இரை யானதை அறிந்த சமணர்கள் மனம் மாழ்கி, மேற்கொண்டு என்ன செய்யலாம் என்று கூடி ஆலோசித்தார்கள். 'முன் போலவே ஒரு தீய வேள்வி செய்து ஒருபசுவை உண்டாக்கி அவர்கள்மேல் ஏவலாம். அவர்கள் பசுவைக் கொல்ல மனம்

---

சேயினது தூயமனச செம்மை, சிறியேற்கு
வாய்க்கும் வழிகள், வளர அருளுதியே

துணிய மாட்டார்கள்' என்று எண்ணினார்கள். அவ்வாறே ஒரு வேள்வியை இயற்றி அதிலிருந்து ஒரு மாயப் பசுவை எழச் செய்து மதுரைமா நகரின்மேல் விடுத்தார்கள்.

அந்தப் பசு மிக்க மிடுக்குடன் புறப்பட்டுச் சென்றது. தன்னுடைய கொம்புகளால் மேகங்களை அலைத்து அவற்றைக் கொடிபோல அக்கொம்புகளிலே பறக்கச் செய்து அது நடை போட்டது. அதன் வெய்ய மூச்சுக் காற்றின் எதிரே சராசரங்கள் குலைந்தன. அதனைக் கண்ட விலங்குகளும் பறவைகளும் அலறியோடின. மரங்களைக் கொம்பால் முறித்து மலைகளை வேர்பறித்தது அளவிலாத பேர்களைக் குத்திக் குமைத்து உயிரைப் போக்கியது. இவ்வாறு சேதத்தை விளைவித்துக் கொண்டு மாயப்பசு வருவதை மாமதுரை மக்களும் பாண்டிய மன்னனும் அறிந்தார்கள். யாவரும் சொக்கலிங்கப் பெருமான் திருக்கோயிலை அடைந்து இறைவனை இறைஞ்சி முறையிட்டார்கள்.

அவர்களுடைய முறையீட்டைக் கேட்டுக் கருணை பூத்த எம்பெருமான் முன்னே இருந்த இடபதேவரை விளித்து, "நீ போய் அந்தத் தீய பசுவை வென்று வருவாயாக!" என்று திருவாய் மலர்ந்தருளினான்.

இறைவனுடைய ஆணையை மேற்கொண்டு அந்த விடை புறப்பட்டது யமனும் அஞ்சும்படி கண்ணில் தழல் கொப்புளிக்க, நாக்கை நீட்டிச் சுழற்றி மூக்கைத் தடவ, கடைவாயில் நுரை வழியக் குதித்துக் கொண்டு வந்தது. கழுத்தில் மணி ஒலிக்கப் பலவகைச் சலங்கைகள் ஆர்ப்பத் தாவி வந்தது அடலேறு. காலால் நிலத்தைக் கீண்டு, கொம்பினால் குத்தித் துள்ளிக் குதித்து வந்தது அந்த இடபம். ஒரு வெள்ளிமலை கால்பெற்று நடந்தது போல வந்த அது, மோப்பத்தால் மாயப்

---

**மக்களது எண்ணங்கள் மாறி யமைவதுபோல,**
**இக்கலியில் நேராமல், என்னைக்கா எந்தாயே!**

பசு இருக்கும் இடத்தை அறிந்து வந்து கிட்டியது. அதைத் தன் கொம்பால் குத்தித் தூக்கி எறிந்து விளையாடியது. கிழக்கே கிடந்ததை மேற்கே தூக்கிப் போடும்; மேற்கே யிருந்ததைக் கிழக்கே தூக்கி எறியும். வடக்கில் உள்ளதைத் தெற்கிலும் தெற்கிலுள்ளதை வடக்கிலும் வீசும். மலையின சிகரத்திலே விழும்படி எடுதது எறியும். காட்டு மரங்களிடையே போய் விழும்படி தூக்கி வீசும். கடலில் விழும்படி எறியும். இவ்வாறு அந்த மாயப் பசுவைப் புலவகையாக அலைதது வீசி எறிந்ததே யன்றிக் கொலலவில்லை.

பிறகு இடபம் தன்னுடைய அழகிய உருவத்தைக் காட்டியது. அதைக் கண்ட பசு காமம் மிக்குத் தன பலத்தையெல்லாம் சோரவிட்டு உயிரையும் விட்டது. அதன் உடம்பு ஒருமலை வடிவமாய் நினறு விட்டது. இன்றும் அது பசுமலை என்ற பெயருடன வழங்குகின்றது.

மாயப் பசு வீழ்ந்தது கண்டு மதுரைமா நகரத்தினர் பெரு மகிழ்ச்சி அடைந்து இறைவனைப் போற்றினார்கள். பாண்டிய மன்னனும் மகிழ்சசிக கடல் புக்கான். அமணர்கள தோல்வி யுற்றுக் குலைந்தார்கள்.

இடப தேவர் தம்முடைய விடை யுருவத்தை ஒரு குன்ருக ஓரிடத்தில் நிறுத்திவிட்டுச, சூக்கும உருவத்தில் இறைவனை அடைந்து பணிந்து முன்னை நிலையில் இருந்து விளங்கலானார்.

இடபகிரியாகிய அஙகே இராமன் இராவண சங்காரத்தின் பொருட்டுப் படையுடன் சென்ற போது தஙகினான். அப்போது அகத்திய முனிவர் அவனுக்குத் திருவாலவாயின் பெருமையைக் கூற அதனைக் கேட்டு மகிழ்ந்து ஆலவாய் இறைவனை வணஙகிச் சென்றான்.

---

நான்என்னும் கர்வமெனை நாடாத வண்ணம்,நீ
தான்வந்தே, என்னறிவில் தங்கியிரு எம்மானே!

உ

# பழமுதிர் சோலை

# திருப்புகழ் விரிவுரை

(குகஸ்ரீ.)

சீர்சிறக்கு மேனி பசேல் பசேலென
 நூபுரத்தி னோசை கலீர் கலீ ரென
  சேர விட்ட தாள்கள் சிவேல் சிவே லென வருமாதர்
 சேக ரத்தின் வாலை சிலோர் சிலோர்களும்
 நூறு லக்ஷ கோடி மயால் மயால் கொடு
  தேடி யொக்க வாடி யையோ வையோவென மடமாதர்
மார்ப டைத்த கோடு பளீர் பளீ ரென
 ஏம லித்தெ ஞவி பகீர் பகீ ரென
  மாம சக்கி லாசை யுளோ முளோ மென நினைவோடி
 வாடை பற்று வேலை யடா வடா வென
 நீம யக்க மேது சொலாய் சொலா யென
  வாரம் வைத்த பாத மிதோ இதோ என அருள்வாயே;
பார தத்தை மேரு வெளீ வெளீ திகழ்
 கோடொ டித்த நாளில் வரைஇ வரைஇபவர்
  பாணி றக்க ணேசர் குவா குவா கனர் இளையோனே!
 பாடல் முக்ய மாது தமீழ் தமீ ழிறை
 மாமு நிக்கு காதி லுணர் வுணர் விடு
  பாச மற்ற வேத குரு குரு பர குமரேசா!
போர்மி குத்த சூரன் விடோம் விடோ மென
 நேரெ திர்க்க வேலை படீர் படீரென
  போய றுத்த போது குபீர் குபீ ரென வெருசோலை
 பூமி யுக்க வீசு குகா குகா திகழ்
 சோலை வெற்பின் மேவு தெய்வா தெய்வா னைதோள்
  பூணி இச்சை யாறு புயா புயா றுள பெருமானே!

---

ஏற்றம் இரக்கம் இரண்டுமே, ஏழைமன
நாற்றம்போல் ஆகுமென, நானறியச் செய்யாயே!

(பதவுரை) பாரதத்தை............இளையோனே!)

பாரதத்தை - (ஐந்தாவது வேதம் எனப் பெறும் இனிய) பாரத இதிகாசத்தை;

மேரு வெளீ வெளீ திகழ் - மேரு மலையில் (வெட்ட) வெளியாகப் புறததில் விளங்குமாறு;

கோடு ஒடித்த நாளில் வரைஇ வரைஇபவர்-(இருந்த தம்) தந்தத்தை ஒடித்த அந்நாளில் (இடையறுது) எழுதியவரும்;

[கோடு - தந்தம். வரைதல - எழுதுதல்.]

பால் நிறக் கணேசர் - அமுத வெண்ணிறக் கணேசர் ஆகிய;

கு ஆகு வாகனர் இளையோனே - வலிந்த பெருச்சாளி வாகனரின் தம்பியெனும் நாமம் தரித்தவரே! ;

[கு - சிறிய எனினுமாம். ஆகு - பெருச்சாளி.]

(பாடல்............குமரேசா!)

பாடல் முக்ய மாது தமீழ் தமீழ் இறை - (உத்தமப்) பாடல் கட்கு உரிய கலைமகளின் (தனி) அழகுடைய தமிழ்க்குத் தலை வர் ஆகிய ;

[மாது - சரஸ்வதி. தமீழ் தமீழ் - ஒப்பற்ற இனிய தமிழ் எனும் பொருளது; இன்பக் கிளுகிளுப்பில் இப்பாடல், பல இடங்களில் ஓசை மீண்டு ஒலிக்கிறது.]

மா முனிக்கு காதில் உணர் உணர்விடு - முதன்மை அகத்திய முனிவர்க்கு, (உயர் ஞான) உணர்வை உணருமாறு உபதேசித்த;

பாசம் அற்ற வேத குரு - (இயல்பாகவே) பாசங்கள் இல் லாத வேத போதனே ; [உணர் - உணர்வு.]

குருபர - அரிய பரம ஆசார்ய;

---

ஆத்மீக வாழ்க்கை, ஆசடையா வண்ணம்,நான்
சாத்வீகம் கொள்ளச், சதுரா அருளுதியே.

(போர் மிகுத்த............குகா !)

போர் மிகுத்த சூரன் விடோம் விடோம் என நேர் எதிர்க்க - (சுறுசுறுப்பான) போரில் (சிறந்த) சூரபதுமன், விடமாட்டோம்; (உன்னை) விட்டுவிட மாட்டோம் என்று வீர மொழி கூறி, (எழும்பி) நேர் நின்று எதிர்க்க;

வேல் ஐ படீர் படீர் என போய் அறுத்த போது - வேல் படை, படீர் படீர் எனும் பயங்கர ஒலியுடன் சென்று, (தலை வேறு உடல் வேருக) அறுத்துத் தள்ளிய போது; [ஐ - முதன்மை ஆயுதம்.]

குபீர் குபீர் என வெகு சோரி பூமி உக்க வீசு குகா - குபீர் குபீர் என்று பெருங் குருதி (சிதறி) நிலத்தில் சிந்துமாறு, (கொடியவர்களை) வீசி யெறிந்த குகப் பெருமானே;

[சோரி - குருதி. உக்க - சிதற.]

குகா திகழ் சோலை வெற்பின் மேவு தெய்வா - குகைகள் (பல) விளங்குகிற பழமுதிர் சோலை மலையில், (தெளிவுதர) எழுந்தருளிய தெய்வமே, [குகா - குகைகள்.]

தெய்வானை தொள் பூணி இச்சை ஆறு புயா - தெய்வ யானையார் தோள்களை விருப்புடன் தழுவும் (இடப்பால்) ஆறு தோள்களும்;

[தோள் என்பது, ஓசை கருதித் தொள் எனக் குறைந்தது. பூணல் - தழுவல்.]

புய ஆறு உள பெருமாளே- (வள்ளியம்மையைத் தழுவும் வலப்பால்) ஆறு புயங்களும் உள்ள பெருமித ஆட்சிப் பெரியோனே! [புயம் - தோள்.]

(சீர்சிறக்கும்............அருள்வாயே !)

சீர் சிறக்கும் மேனி பசேல் பசேல் என - செயற்கை அழகு சிறந்து விளங்கும் இயற்கை அழகுடல், பசுமை, மென்மை எனும்படி யிருக்க; [மேனி - மின்னும் தேகம்.]

---

கலைகள் உரைக்கும் கனிவான சூழ்நிலைகள்,
நிலையாக என்னில் நிகழ அருளுதியே!

நூபுரத்தின் ஓசை கலீர் கலீர் என - (காலில் உள்ள) சிலம்பின் ஓசை, (இடையிடை) கலீர் கலீர் என ஒலிக்க ;

சேர இட்ட தாள்கள் சிவேல் சிவேல் என - (ஒரே) அளவாக எடுதது வைத்த பாதங்கள், செக்கச் செவேல் என்று (தம்) சிவந்த தன்மையை அறிவுறுத்த ;

வரும் மானார் - (நடந்து) வரும் மான்போல் (மருளும் கண்) மாதர்களை(க் கண்டு) ;

சேகரத்தின் வாலை சிலோர் சிலோர்களும் - (செம்மாந்த மதமதப்பை உணவாதிகளால்) சேகரித்த உடலுடைய இளங் காளையர் சிலர் ; [சேகரம் - தொகுப்பு, வாலை - வாலிபம்.]

நூறு லக்ஷ கோடி மயால் மயால் கொடு - (அகத்தாலும் புறத்தாலும்) அளவிறந்து மயல் பெருகி ;

தேடி ஒக்க வாடி ஐயோ ஐயோ என - (தெரிவையர் இருக்கும் இடம்) தேடி, (உடலும் மனமும்) ஒருசேர வாட்டம் அடைந்து, ஐயோ ! ஐயோ என்று இதயம் படபடக்குமாறு ;

மட மாதர் மார்பு அடைத்த கோடு பளீர் பளீர் என - (அந்த) இளம் பெண்களின் மார்பின் இடம் முழுவதும் மறைத்த குயஙகள், (தம் எடுப்பாலும், தரித்த அணிகளாலும்) பளீர் பளீர் என்று பளபளக்க ; [கோடு - நகில்கள்.]

ஏமலித்து என் ஆவி பகீர் பகீர் என - பகீர் பகீர் என்று (குதூகலமிழந்த) என் உயிர் குழம்பி ;

[ஏமலித்தல் - கலங்கல. ஆவி - (உஷ்ண) மூச்சு எனினுமாம்.]

மா மசக்கில் ஆசை உளோம் உளோம் என நினைவு ஓடி - மாபெரும் அவர்களது (வசீகர) மயக்கில், இச்சை பெரிது உளோம் உளோம் என்று, (நேரிழையர் இடத்தில்) நெஞ்சு விரைந்து ;

---

பந்தம் மிகுந்து பழுதுபடா வண்ணம்,என்
சிந்தனையில் தங்கி,உன் செல்வமருள் செய்யாயோ ?

வாடை பற்று வேளை அடா அடா என - (அப் பாவையர்) வாடைக் காற்று, (அடியேன் மேல்) படும் அளவில்; அடா! (இது உனக்கு) அடுக்காதடா என்று கூறி;

நீ மயக்கம் ஏது சொலாய் சொலாய் என - எதற்காக நீ மயக்கம் எய்தினை? சொல் சீக்கிரம்! சொல்லு என்று வினவி;

வாரம் வைத்த பாதம் இதோ இதோ என அருள்வாயே - (நீ) இயற்கை அன்பு வைத்த திருவடிகள், இதோ இதோ இருக்கின்றன பார்! பார் என்று கூறி, பரம திருவருளைப் பாலித்தருள், (எ-று.)

## விரிவுரை.

தந்தை துஷ்யந்தன்; தாய் சகுந்தலை. பிறந்த மகன் பரதன்; அவன் கால்வழியர் பாரதர். அவர்கள் வரலாறு கூறும் இதிகாசம் பாரதம். எப்பொருளும் இதன்பால் உள. ஆதலின் இந்நூல், ஐந்தாம் வேதம் என்று அறியப் பெறும்.

வியாஸர், பயனுள அக் காவியத்தைப் பாட நினைத்தார். விக்கினம் இன்றி அந்நூல் விளங்க வேண்டும். பாடுகிறேன் அடியேன். ஏடு கொண்டு அதை எழுதியருள் என்று, விநாயகப் பெருமானிடம் விண்ணப்பம் செய்தார்.

யானை முக அவுணன் ஒருவன். அவன், எவரையும் போடு தோப்புகரணம் என்றவன். ஒடித்த தந்தத்தால், பெருமான் அவனை ஒடுக்கினார். இறவா வரம்பெற்ற அந்த இடும்பன், சிறுமைப் பெருச்சாளி யாகிச் சிரித்தான். உறுத்து எதிர்த்த அவனை ஊர்தியாக்கி, பரம அருள் ஞானத்தைப் பாலித்தார். அதன்பின், என்றும் தந்தம் கரத்தில் இருந்தது. அதையே எழுத்தாணி யாக்கினார்.

---

**மயக்கம் நிலைத்து மருளுகின்றார் தம்மை,**
**இயற்கை திருத்தும் இயல்பறிந்து கொண்டோமே.**

மண்ணுலக நடுவில் உள்ள பொன்மலையில், வியாஸர் விரைந்து பாடும் அந்த பார காவியத்தை, தடைபடல் இன்றித் தாமே எழுதினுர். பூமி பாரம் தீர்த்த வரலாருன அப் புனித காவியம், எவரும் உணருமாறு, கல்மேல் எழுத்தென என்றும் கவினி யிருக்கின்றது. எழுதாக் கிளவியான வேதம்போல், எழுதிய கிளவி பாரதம், பயன்விளைய எங்கும் பரவியிருக்கிறது. இங்ஙனம் புனித உதவி புரிந்து, எங்கும் எவர்க்கும் எளியரான பிள்ளையாரின் உடன் உதித்த இளைய பிள்ளையா ராதலின், ஆறுவாகனர் இளையோனே என்று, உம்மை அழைத்து மகிழ்ந்து ஆநந்தம் அடைவம்.

அமுதினும் இனிக்கும் தனிப்பெறும் சிறப்புடையது தமிழ்; அதையளித்த அன்னை கலைமகள்; வளம்பல அமைய, வளர்த்த தந்தை அகத்தியர். ஐந்தாம் சங்கர சொரூபம் என்று அறியப் பெறும் அவர்க்கு, சிவதருமோத்தரத்தை, சிந்தை மகிழச் செவியில் உணர்த்தினீர்.

பாழும் துன்பங்கட்குப் பாசம் காரணம். எந்தப் பாசமும் இயல்பில் இல்லாதவர் நீர். வேதத்தின் மூலம் அபர ஞானம் விளையும்; அதை வேதியர்க்கு அருளிய போதகர் நீர். சிவ ஞானத்தை, அடியார்க்குச் சிறக்கப் பாலிக்கும் செல்வர் நீர். ஊன்றி இவைகளை உணர்ந்து, பாசம் அற்ற வேத குரு! குருபரா என்று, கூவி மகிழ்ந்து உம்மைக் கும்பிடுவம்.

'முருகா! நீ இளையவன்; பழைய தனுர் வித்தை பயிலாத வன். மானம் உடையவன். உனக்கும் எனக்கும் வேற்றுமை பல. மரியாதையாக ஓடிவிடு! கதியற்றவர்களைக் கைவிட மாட்டேன்! விடுவிப்பேன் என்று மேலும் கர்வித்து எதிர்த்தா யேல், விடமாட்டேன்! இலேசில் உன்னை விட்டுவிட மாட்டேன் என்று, ஒரு காலத்தில் வீரகர்ஜனை செய்தான் சூரபதுமன்.

---

செயற்கையாம் நூற்களைச் சீரற்றூர் செய்து,
இயற்கை வழிவருந்தி, ஏங்கியதும் கண்டோமே.

சூரா! எம்மை விடாதே; சொன்னபடி செய்! என்று வீறு கூறி விட்ட வேல், படீர் படீர் எனும் ஒலியுடன், உறுத்த வர் தலைகளை உருட்டியது. களமெல்லாம் உதிர வெள்ளம் பெருகியது. கயமுகனை ஊர்தி யாக்கிய கணபதியின் தந்தம் போல், சூரன் ஆணவத்தைச் சுருக்கி, அவனை மயிலாக்கி அளித்த அரிய உமது வேற்படையின அருமையே அருமை. ஞான சக்தியால், ஆணவ சக்தி அடங்கும். மறைப்பை விளை விக்கும் மயிலெனனும் ஆவரண சக்தி மடங்கும். இந்த அழகிய தத்துவத்தை, இங்கு அறிந்து கொள்கிறோம். சூரன் விடோம் என வீசு குகா!

இதய குகையுள் இருப்பது போல், குகைகள் பலவுள பழமுதிர் சோலையில் மறைந்து இருந்து, அன்றும் இன்றும் அருள பாலிக்கிறீர், உணர்கிறோம். அங்கு மேவு தெய்வா! என்று, அடியேம் இதயம் உம்மை அழைக்கிறதே!

மோனஞான முதல்வி தேவயானையார். யோகிகட்கு உதவும் அத்தேவியை, இடப்புறத்து ஆறு தோளகளில் இணக்கினீர். ஞான குறமாது எனப்பெற்று, பேதம் பாராது எவர்க்கும் அருளும் வள்ளி யம்மையை, வலப்புறமான ஆறு தோள்களாலும் அணைத்தீர். புயா புய ஆறு உள பெருமாளே! உமது அருளாட்சியைப் பேசும் போதே மகிழ்வு பிறக்கிறதே!

பெரும! கேண்மையேன் விண்ணப்பம் கேட்டருளும்!

இயற்கை யழகும், செயற்கைக் கோலமும் சிறந்து விளங் குபவர் சேயிழையர். தங்கத்தில், ஒருவிதமான பசுமை தவழும்; அதுபோல், தரத்திற்குத் தக்கபடி, பாவையர் மேனியில் பசுமை படரும். அது, அவர்கட்குப் பரம இயற்கை தந்த பரிசு.

அதைக் காணும் ஆடவர் எவரும், பசபச என்று நமை படர வேண்டா! அது பைத்தியக்காரத்தனம். பசேல்! பசேல். பேஷ். இது இயற்கை யறிவிக்கும் இனிய செய்தி.

---

**உள்ளம் தெளிவை யுறுங்காலம் நேரும்வரை,**
**கொள்ளும் சுவாசக் குறிப்புணரல் புண்ணியமே.**

புற அழகு கண்டு ஏமாந்து போகாதீர்கள்! கருதத் தக்க வற்றைக் கற்றுக் கொள்ளுங்கள்! காணவும் தகாதவற்றைக் கற்காதீர்கள் எனும் தொனிப் பொருளில், அம் மாதர்தம் நூபுரத்தின் ஓசை, க(ல்)லீர்! க(ல்)லீர் என, உயர்குண நிலையை உபதேசிக்கின்றது.

எடுத்தடி வைத்து நடக்கின்றார் ஏந்திழையர். பவளம் போல் சிவந்த அவர்தம் பாதங்களை, கண்டு எவர் மனமும் கருக வேண்டா; அதனால் உஷ்ணம் மிகுந்து, செந்தணல் போல் முகம் சிவக்க வேண்டா எனும் பொருளில் அவைகள், சிவேல்! சிவேல் என்பனபோல இருக்கின்றன.

மானத்தில் நோக்குடைய மாதர்கள், மான்போல் மருளும் கண்ணினர். அவர்கள், தம் செயல்முகமாக வீதிகளில் வரு கின்றார், போகின்றார்.

பிறந்து வளர்ந்து, உணவாதிகளைக் கண்டபடி உண்டு கொழுத்த காளைகள் சிலர், சேகரத்தின் வாலை சிலோர் சிலோர்கள் எனப் பெறுவர். இந் நிலையர் பலர் அல்லர். ஒரு சிலர் தான; பசேல் பசேல், கலீர் கலீர், சிவேல் சிவேல் எனவரும் சேயிழையரை, அத்தகைய சிலோர் சிலோர் கண்டு, அள விறந்த மயல் அடைந்து, தெரிவையர் இருக்கும் இடம் தேடி, வளமான உடல் ஒருசேர வாடி யிளைத்து, நினைத்த தம் எண் ணம் நிறைவேறாமையால், ஐயோ! ஐயோ என்று அழுங்கு கின்றனரே!

பருவம் சிறந்த பாவையர், மடமாதர் என்று மதிக்கப் பெறுவர்.

[மடம் - அறிந்ததை அனுட்டித்து, பிறவற்றை அறிய விழையாத தன்மை. மாதர் - அழகின் மயம் ஆனவர்கள்.]

அவர்களது எடுப்பான குயங்கள், அக் காளைகளை மேலும் ஏமாற்றுகின்றன. அதன் மேல் தரித்த அணிகலன்கள், பளிச்

---

கல்மனத்தைப் பண்படுத்தும் கண்ணியமாம் வாழ்க்கையினைப், புல்ல, அடியேற்குப் புத்திதா புண்ணியனே!

பளிச்சென்று ஒளி வீச, பார்த்துப் பல்லிளித்து, குழம்பி மனம் குமுறுகின்றனர்.

மடமாதர் மார்படைத்த கோடு, பளீர் பளீர் என ஏமலித்து. [ஏமலித்தல் - நிலை குலைதல்.]

பக் பக் என்று மனம் படபடக்கின்றது. உஷ்ண சுவாசம், குபீர் குபீர் என்று வெளிப்படுகின்றது.

என் ஆவி பகீர் பகீர் என. [ஆவி - உயிர்ப்பு.]

இத்தகைய சாயல் சூழ்நிலையில், மேலும் மேலும் அறி விழந்து, இணக்க இச்சைதான் பெரிதுடையோம் எனும் குறிப்பில், மாமசக்கில் ஆசை உளோம் உளோம் என நினைவு ஓடி. [மசக்கு - மயக்கு.]

அரிவையர் வாடையை மோந்து பற்றும் அவகேடான அச் சமயத்தில், உன் செயல் அடாது அடா! சிறிதும் அடுக்காதடா என்று அதட்டி, பருவநிலையில், போர்க்கும் மேனிப போர்வை அது! நீ அறிவுடைய ஆண்பிள்ளை! நீ மயஙகுவது எதற்கு? சொல்லடா! சொல் என்று அறிவுறுத்தி, அன்பு என்பது இயற்கைப் பண்பு. உன்னில் அந்த அன்பு, புதையல் பொருள் போல் பொதிந்துளது. அந்த அன்பால் நீ ஆராதிக்கும் திருவடிகள், இதோ! இதோ இருக்கின்றதேடா! பராபரம் எனபது பாதஙகளின் திருப்பெயர். "சடாதரத்தின் மீதே பராபரத்தை நீ காண்!" என்று காட்டியருள்!

இளையோன, குமரேசன், பெருமாள் என எங்கள் பரி பாகத்திற்குத் தக்கபடி, கோலம் கொண்டு ஆடல் இயற்றும் கோவே! தையலர் மேல் வைத்த பாசத்தை, எம் தாள் மலரின் வை என, அவரவர் அறிவில் தஙகி அறிவித்தல் செய்! என்று, போகும் உலகப் போக்கை யறிந்து கலங்கி அழுது கதறியபடி.

வாழ்க திருப்புகழ் வளம்.

ஓம்.

# குமாரஸ்தவ விளக்கம்

(திருப்புகழ் சதுரர் சே. த. ராமலிங்கம் பிள்ளை, B.A., B.T.)

**44. குமாரபதயே நமோநம:**

குமார - குமாரனாகிய; பதயே - தலைவனுக்கு; நமோநம: - போற்றி! போற்றி!!

**குமாரன் :**

குமாரன் என்ற திருநாமத்துக்கு எட்டு வகையான பொருள்களைக் குமாரஸ்தவம் என்ற தலைப்பில் முன்னரே கூறியுள்ளேன். இனி அவையன்றி வேறு பொருள்களுமுண்டு. அவற்றைக் காண்பாம்.

(1) கொ - பூமி; மா - லட்சுமி; ரதி - தருபவன். கு, சகித, மா - பூமியோடு கூடிய லட்சுமி—ராஜலட்சுமியைத் தருபவன். குமாரனை வழிபடுவார் பூமியை ஆளும் அரசசெல்வம் பெறுவர். "அலைகடல் வளைந்துடுத்த எழுபுவி புரந்திருக்கும் அரசென நிரந்தரிக்க வாழலாம்; அளகை அரசன் தனக்கும் அமரர் அரசன் தனக்கும் அரசென அறஞ்செலுத்தி ஆளலாம்" என்பது கடைக்கணியல் வகுப்பு.

(2) குமா = க + உ + மா

க—பிரமன், உ—விஷ்ணு, மா—சிவன் ஆகிய மும்மூர்த்திகளையும், (தன்னிலிருந்து) ராதி—தரும் (உண்டாக்கும்) பரம்பொருள்.

"மாலயன் தனக்கும்............உற்ற
மூல காரணனாய் நின்ற மூர்த்தி" (கந்தபுராணம்)

(3) க - பிரமன், உ - திருமால், மா - சிவன் (மூவர்க்கும் தொழிலை), ரதி - தருபன், குமாரன்.

---

நேர்மையாம் வாழ்வு, நியதி யுடையதென
ஓர்வேன் ; அதுநிலைக்க உன்னருளைச் செய்குதியோ ?

"படைக்கப் பங்கயன் துடைக்கச் சங்கரன்
புரக்கக் கஞ்சைமன் பணியாக
பணித்துத் தம்பயம் தணித்துச் சாததம்
பரத்தைக் கொண்டிடும் தனிவேலா"

(பங்கயன-அயன், சங்கரன்-உருத்திரன், கஞ்சைமன்-லக்குமி காந்தனுன மால்.)

" மூவர் தேவாதிகள் தம்பிரானே " (திருப்புகழ்)

4. கு - ஏழைகட்கு (தாழ்ந்தவர்கட்கு), மா - பெருமையை ; ராதி - தருபவன். குமாரன் - ஏழை பங்காளன். "ஏழைக்கிரங்கும் பெருமாளே."

(5) கு - விகாரமானவர்களை, மாரன் - அழகாகச் செய்பவன்; துர்விர்த்திகளை அடக்கி நன்னெறி செலுத்துபவன்.

அழகற்ற விகார ரூபிகளையும் குமாரன் அழகனுக்கி விடுகிருன். இது குமாரனைத் தியானம் செய்தலால் வரும்.

"நின்மலச் செஞ்சோதி வடிவுடைய உனை அனவரதம்
நினைப்போர்க்கு என்றும்
பொன்மயச செம்மேனி யுடம்பு உண்டாகும் நரைதிரைகள்
பொருந்தா; புன்கண்
தன்னுரத்தினுல் உயிர்கொள் கூற்றுமணுகா தெதினும்
சத்தாய நிறகும்
சின்மயத்தின தெருட் பிழம்பே யான்தொழுமோர்
வேல் சமர்ததா சிவச்சீர்க் குன்றே"

என்ற திருத்தொடையல் அடிகளை நோக்குக.

"புன்னெறி யதனிற் செல்லும்
போக்கினை விலக்கி மேலாம்
நன்னெறி இதுவே யென்று
நவையறு காட்சி நல்கி

---

நன்னெறியைக் கைக்கொண்ட நல்லோர் பலர்; அவர்தாம்
என் ஆயினுஞ் சரியென் றெண்ணுவதும் கண்டோமே!

என்னையும் அடிமை கொண்டு
இருவினை நீக்கி ஆண்ட
பன்னிரு தடந்தோள் அண்ணல்
பாத பஙகயங்கள் போற்றி! " (கந்தபுராணம்)

எனவே, குமாரபதி என்ற திருநாமம் மண்ணுலக மரசாளும் வரந் தருபவன், மூவர்க்கு முதலான மூர்த்தி, ஏழைக்கிரங்கும் பெருமாள், தேசசு வழங்கும் தேசன், சித்த விகார நீக்கி முத்திச் செல்வமருளும் முருகவேள் எனறெல்லாம் பொருள்படுகினறது. இவ்வித ஆக்கஙகளை அருளும் குமார பகவானுக்கு வணக்கம கூறுவதாக இச் சிறுநூல ஒருவாறு பூரணம் பெறுகின்றது. குமார நாமததிற்கு இனனும் ஞான தபோதனர் அருளும் அநுபவ உரைகளுளவேனும் அவற்றையும் கொள்ளலாம்.

மங்கல உரை : (1) நனஞனகு அடிகள் என்பனபோல 44 அடிகளால் ஆழமான கருத்துக்களை அறிதற்கு உண்ணின்று உணர்ததி யருளிய குருவருள் வாழ்க. திருவருள் வாழ்க. (2) குமாரநாமம் சடக்கர மந்திர மாதல் பற்றியும், 6 × 6—ஆறு ஆறையும் நீத்து அதனமேல நிலையாயுள்ள ஆறுமுகனை அறிய உதவிசெய்யு மாதலால் ஷண்முகபதயே எனத்தொடங்கி, முதல் ஆறு அடிகளிலும் 'ஷட்' எனற ஆறு எண பயின்று வருதலும் பிறவும் இந்நூலின் அருமை பெருமைகளாம். (3) ஷண்முக பதிதான் குமாரபதி எனறு முடித்துக் காட்டும் அழகே அழகு. (4) குமார என்பதில் கு என்பதில் 'உ'கரமும், மா - என்பதில் 'ம'கரமும், 'ர' எனபதில் 'அ' என்ற அக்கரமும் பயின்று வருதல உ + ம் + அ எனற திரியக் பிரணவததை நினைவூட்டி, சர்வ சக்தியும் வளரச் செய்யும் என்று பாராயண பலனையும் கூறும் கருணைக்கு என்ன கைம்மாறு உள்ளது ?

இவைபோல்வன பலவுள. அவற்றை வல்லார்வாய் கேட்டுணர்க.

[குறிப்பு—அடுத்து வரும் இதழ்களில் பாம்பனடிகள் அருளிய சிறுநூற்றிரட்டு முறையே குருவருள் துணைகொண்டு விளக்கம் பெறும்.]

## பரம சௌலப்யம்

(கி. வா. ஜ.)

முருகன் தம்மை ஆண்டருளிய அதிசயத்தைச் சொல்ல இயலாதது என்றவர் முருகனைத் துதிக்கிறார். இந்தப் பேரின்ப அனுபவத்தைத் தந்த முருகனுடைய பெருங்கருணைத் திறம் நினைக்க நினைக்க வியப்பை ஊட்டுகிறது. சிறிதும் தகுதி யில்லாத தமக்கு, சொல்லில் அடங்காத பேரானந்தப் பிராப்தி யைத் தந்தருளினனே என்று எண்ணி எண்ணி அதிசயிக்கிறார். 'முருகா உன்னுடைய எளிவந்த வான்கருணையை என்ன வென்று சொல்வேன்! ஒன்றுக்கும் பற்றாத நாயேனை ஆண்டருளின பெருமையை என்னளவிலே கண்டதாக நினைத் தேன். ஆனால் உன்னுடைய அருள் வரலாற்றைப் பார்த்தால், நீ எப்போதுமே தாழ்ந்தவர்களுக்கும் இரங்கும் தயாநிதி என்பதை உணர்கிறேன். கற்பக மலரைப் புனைந்து அதன் நிழலில் இருந்து வாழும் இந்த்ராதி தேவர்கள் உன்னை அணுகு வதற்கு அஞ்சிக் கொண்டிருக்கிறார்கள். அத்தகைய பெரு மானாகிய நீ வேடர் கூட்டத்தில் புகுந்து அங்குள்ள வள்ளி நாயகியை வலியச் சென்று தடுத்தாண்டருளினாய். வெறும் காட்டு மலராகிய கூதாளம் பூவை அணிகின்றவர்கள் வேடர் கள். கற்பகமலர் புனையும் அமரர் எங்கே! இந்தக் கிராதர்கள் எங்கே! ஆயினும் நீ கூதாள கிராத குலத்தில் வளர்ந்த குற மகளை விரும்பிச் சென்று ஆட்கொண்டாய். இது உன்னு டைய பரம ஸௌலப்யத்தைக் காட்டுகிறது. எளியேனை ஆள்வதற்கு முன்பே இப்படிச் சௌலப்ய சௌசீல்யங்களில் சேகேறியது உன்னுடைய திருவுள்ளம்.'—இவ்வாறெல்லாம் அவருடைய சிந்தனை ஓடியது.

---

மானுடமாம் ஆலயம், மாதேவா நின்இருப்பாம்;
நானிதனை நம்பற்கு நம்பா அருளுதியே!

கூதாள கிராத குலிக்கு இறைவா !
என்று முருகனைத் துதித்தார்.

மேலும் அவருடைய எண்ணம் விரிந்தது. முருகனை வேதம் துதிக்கிறது. முனிபுங்கவர்கள் பாராட்டுகிறார்கள். தேவர்கள புகழ்ந்து பாடுகிறார்கள. கந்தருவரும் வித்தியாதரரும் கீதம் பாடிப் பரவுகிறார்கள். ஆரணங்கினர் பலர் போற்றிப் பாடி இசை எடுத்து ஓதுகிறார்கள்.

பெரிய பெரிய தேவர்கள் முருகனைப் புகழ்வதிலே பெருமையை அடைகிறார்கள். தங்கள் வாக்கு அதனால் புனிதம் அடைவதாக எண்ணி இன்புறுகிறார்கள்.

இவ்வளவு பெரியவர்களுடைய ஆரவாரமான இசைப் பேரொலியினூடே புதுவிதமான குரல் ஒனறு கேட்கின்றது. அந்தக் குரலில் இனிமையில்லை. கரகரப்பான ஒலி. வேதாளங்களின் குரல் அது. அவைகளும் முருகனைப் புகழ்ந்து பாடுகின்றன.

பூதம், பைசாசம், வேதாளம் என்று ஒரே இனமாகச சேர்த்துப் பேசுவது வழக்கம். வேதாளம் தலைகீழாகத தொஙகுவது. பிறரைப பற்றிக் கொண்டு துன்புறுத்துவது. நன்மையே செய்யத் தெரியாத சாதி அது. விக்கிரமாதித்தன கதையில் ஒரு வேதாளம் வருகிறதை நாம் அறிவோம். அது அடிக்கடி முருக்க மரத்தில் ஏறிக்கொள்வதாகக் கதை படித்திருக்கிறோம். நல்ல பொருள்களோடு சேர்த்து எண்ணும் இயல்புடையது அன்று வேதாளம்.

அவ்வாறு இழிகுணங்களும் இழி செயல்களும் உடைய வேதாளக் கூட்டம் சேர்ந்து முருகனைப பாடுகின்றனவாம். இது ஆச்சரியமானதாக இல்லையா? வேதாள கணம் உருவத்தில் வேதாளமாக இருந்தாலும் முருகனுடைய அடியார்களாகி

---

உள்ளம் உவந்து, உமக்கே தமைவழங்கும்
கள்ளமகல் நல்லோரைக் காண அருளுதியே !

அவனைத் துதிக்கத் தலைப்பட்டிருக்கின்றன. அசுரர்களை அழித்த போர்க்களத்தில் வேதாளங்கள் அந்தப் பிணங்களை உண்டு களித்தன. அப்போது தமக்கு இந்தப் பெரு விருந்தை வழங்கிய முருகனை வாழ்த்தின. அதுமுதல் கொண்டு இந்தக் கூட்டம் முழுவதுமே முருகனடியாராகிவிட்டது. அவனைப் புகழ்வதே தம்முடைய வேலையாக வேதாளங்கள் மேற்கொண்டு விட்டன. அந்த வேதாளங்களின் மனத்தையே மாற்றித் தன்னைப் பாடும்படியான அற்புதத்தை விளைவித்தவன் முருகன். அவன், எவ்வளவு அபக்குவியாக இருந்தாலும் ஆட்கொண்டு இன்பந் தருவதில் ஆச்சரியம் ஏதும் இல்லையே!

வேதாளகணம் புகழ் வேலவனே!

கூதாள கிராத குலியை ஆண்டது அவன் எளிவரும் கருணைக்கு ஓர் அடையாளம். வேதாளகணம் அவனைப் புகழ் வது, அவன் எவ்வளவு தாழ்ந்ததையும் உயர்நிலை அடையச செய்வான் என்பதைக் காட்டுகிறது. 'இத்தகைய நீ, தகுதி யற்ற எளியேனை ஆண்ட பெருங் கருணை சொலத் தரமா?' என்கிறார் அருணகிரிநாதர்.

ஆதாளியை ஒன்றறி யேனை அறத்
தீதாளியை ஆண்டது செப்புமதோ!
கூதாள கிராத குலிக்கிறைவா
வேதாள கணம் புகழ் வேலவனே!

[வெறும் இடம்பப் பேச்சாளனும் நல்லது ஒன்றும் அறியாதவனுமாகிய அடியேனை, முழுக்க முழுக்கத் தீய செயல் களையே செய்யும் நாயேனை, என் தகுதியின்மை பாராமல் நீ ஆட்கொண்டாயே! அந்தப் பெருங் கருணை சொல்லத் தரமா? கூதாள மலர்களை அணியும் வேடர் குலத்தில் வளர்ந்த வள்ளி நாயகிக்குத் தலைவனே, வேதாளக் கூட்டம் புகழ்கின்ற வேலா யுதக் கடவுளே.]

---

தற்பெருமை நீங்கித் தனிப்பெருமை சார்வாரைச
சிற்பரா! நாயடியேன் சிந்திக்கச் செய்வாயே!

## தென்னாட்டுத் தலதரிசனம்—தொடர்ச்சி

(தணிகைமணி. வ. சு. செங்கல்வராய பிள்ளை, M. A.)

சிதம்பரத்துப் பாக்களுள் மனப்பாடம் செய்யத்தக்க அடிகள் இரண்டு உள. அவைதாம்—

1. மனதாலே இறந்திட்டுப் பெறவே கதியாயினும்
இருநதிட்டுப் பெறவே மதியாயினும்
இரண்டிற் றக்கதோர் ஊதியம் நீ தர இசைவாயே. 631

2. கழலிணை பணியும் அவருடன் முனிவு
கனவிலும் அறியாப் பெருமாளே. 635

### திருவேட்களம் முதல் சீகாழிவரை

தில்லைக் கோயிலைப் பலகால் வீழ்ந்து இறைஞ்சி அண்மையிலுள்ள திருவேட்களத்தை (11) அடைந்து "சதுரத்தரை" (751), 'மாததிரை யாகிலும்' (752) எனத் தொடங்கும் திருப்புகழ்ப் பாடல்களைப் பாடினர். 'சதுரத்தரை' என்னும் பதிகத்தில் முதல் நான்கு அடிகளில் சிவாநுபூதிச் செல்வத்தைத் தருவதான திருவடிக் காட்சி, தமது ஆணவ மலம் நீங்கும்படி வாட்டிய அவருடைய பன்னிரு தோள்கள், ஆறு முகங்கள், கருணைத் திருக்கோலம், அடியார்கள் முத்தமிழ்ப் பாக்களைப் பாடிப் புகும் காட்சி, தாம் நற்கதிபெற அவர் நோக்கிய பார்வை ஆகிய இவைகளை மறவேன் எனத் தமது வரலாற்றை நன்றியுடன குறித்துள்ளார்.

பின்னர் திருவேட்களத்தின் அருகிலுள்ள திருநெல்வாயில் (சிவபுரி) 12 என்னும் தலத்துத் திருக்கோயிலை வணங்கி, 'அறிவிலாதவர்' எனத் தொடங்கும் திருப்புகழில் (753) வறுமை காரணத்தால் அறிவில்லாதவர்பாற் சிறந்த தமிழைக் கூறித் தாம் வாடினதை நினைந்து, "வறுமையாகிய தீயின் மேற்

நிலையற்ற வாழ்க்கையிது, என்றுமே நிற்குமெனும்
தலையற்ற சூழ்வு, தளர்ந்தழியச் செய்வாயே !

கிடந்து நெளியுநீள் புழுவாயினேற்(கு) இரங்கி அருள்வாயே"
என வேண்டி வணங்கினர்.

அங்கிருந்து செழும் பொழில் சூழும் **திருமுதுகுன்றம்** என்னும் விருத்தாசலத்தை (13) அடைந்து, பெருமானுடைய சந்நிதியில் விழுந்து எழுந்து 'குடத்தாமரை' (754), 'திரு மொழி' (755), பசையற்ற (756) எனத் தொடங்கும் மூன்று பாடல்களைப் பாடினர். அத்தலத்தைச் "சிவபத்தர் வளர் விர்த்தகிரி" (756) என்றும், அத்தலத்தில் இறப்பவர் †மானிடப் பிறவியை ஒழிப்பர் என்றும் விளக்கி யுள்ளார்.

"முடிபவர் வடிவறு சுசிகர முறைதமிழ் முதுகிரி" (755) என வருவது காண்க. இத்தலத்திற்கு வருவதற்கு முன்பே 'அதலசேடனார் ஆட' என்னும் திருப்புகழைப் (1056) பாடி முருகவேளை 'மயிலும் ஆடி, நீ ஆடி வரவேணும்' என வரவழைத்த வாத நிகழ்ச்சி திருஅண்ணாமலையில் நடந்திருக்க வேண்டும்; ஏனெனில் இவர் வேண்டியவாறே பெருமான் ஒரு நொடியிலே சபைக்கு எழுந்தருளினார் என்பது,

'உலகினில் அனைவர்கள் புகழ்வுற அருணையில்
ஒருநொடி தனில்வரு மயிலவீரா"

எனத் தெளிவாகத் "திருமொழி உரைபெற" என்னும் இத் தலத்துத் திருப்புகழில் (755) கூறப்பட்டுள்ளது.

[ †தூசினால் அம்மை வீசித் தொடையின்மேற் கிடத்தித் துஞ்சும், ஆசிலா உயிர்கட் கெல்லாம் அஞ்செழுத்தியல்பு கூறி, ஈசனே தனது கோலம் ஈந்திடும் இயல்பால் அந்தக், காசியின் விழுமிதான முதுகுன்ற வரையுங் கண்டான்,
(கந்தபுராணம் 1-23-13)

² "முத்திதரும் உயர் முதுகுன்றம் "—சம்பந்தர் 3-99-8

---

இரும்பை உருக்கி எஃகாக்கு மாறு,
கரும்பாம் நினையெண்ணிக், கதியடையச் செய்யாயோ!

விருத்தாசலத்தை விட்டு வேப்பூர் (14) என்னும் தலத்திற்குப் போந்து மூன்று பாடல்களைப் (757—59) பாடினார். பின்னர் அங்கிருந்து கூடலை யாற்றூருக்குப் (15) போந்தார். அத்தலத்தில் ஆண்டவனை வணங்கி, "வாட்டியெனைச் சூழ்ந்த வினை" எனவரும் அருமைய பாடலைப் (760) பாடினார். அப்பாடலில் மணிமுத்த நதியும் வெள்ளாறும் கூடுமிடம் இத்தலம் என்பதை விளக்கியுள்ளார். மதுரையில் சிவபெருமான் (பிட்டுக்கு) மண்சுமந்த திருவிளையாடலையும் இப்பாட்டில் குறித்துள்ளார்.

பின்னர் எருக்கத்தம்புலியூர் (16) என்னும் தலத்தை அடைந்து, அத்தலம் திருநீலகண்ட யாழ்ப்பாண நாயனார் தலமாதலின், அதனை 'யாழ்ப்பாண் நாயன் பட்டினம்' என 'பூத்தார் சூடும்' எனத்தொடங்கும் திருப்புகழில் (763) விளக்கியுள்ளார்.

பின்பு அங்கிருந்து திருமுட்டம் (17) (ஸ்ரீமுஷ்ணம்) என்னும் தலத்தை அடைந்து, 'கழை முத்து' (764); 'சரம் வெற்றி' (765) எனத் தொடங்கும் இரண்டு திருப்புகழ் பாடலைப் பாடினார். 'கழைமுத்து' என்னும் பாடலில் முத்து பிறக்கின்ற இடங்களைக் கூறிப், பலவகைத்தான முத்துமாலைகளை அணிந்து அடியார் குழாத்துடனும் தேவிமாருடனும் பச்சைமயில் மீது வந்து உனது தரிசனத்தைத் தருவாயே' என (764) வேண்டியுள்ளார். தேவசேனையைத் 'திருமுத்திமாது' என விளக்கியுள்ளார். இது 'முத்தித்தரு பத்தித்திரு நகை' என்னும் திருப்புகழின் (1) பாடபேதத்துக்குப பொருந்தியதாய் உள்ளது. மேலும் 'சுரம்வெற்றி' என்னும் பதிகத்தில் திருமால் அமுது பங்கிட்ட போது சிவபகதருக்கு இவ்வமுதைப் பகிர்வேன்

---

நீராவி யாக்கி நெடுஞ்செயல்கள் செய்வார்போல்,
சீராவி யாக்கி,நினைச் சேவிக்கச் செய்வாயே.

எனப் புகிர்ந்து கொடுத்ததாகக் கூறப்பட்டுள்ள விஷயம் அறிந்து மகிழத் தக்கது.

பின்னர் அங்கிருந்து கடம்பூருக்கு (18) வந்து கந்தவேளைப் பணிந்து, 'வாரும் இங்கே' எனனும் திருப்புகழைப் (761) பாடினார். அப்பாடலில ''சூரியன் தேரோட அயிலேவி'' என்னும் அடியில், சூரியன் தேர் சூரபதமாவுக்கு அஞ்சி அவன் சொற்படி வழிமாறி போய்க் கொண்டிருந்த விஷயம் ஓதப்பட்டுள்ளது.

பின் அங்கிருந்து சம்பந்தப் பெருமானுடைய திருமணம் நடந்த தலமாம் நல்லூரை (19) (ஆச்சாபுரத்தை) அடைந்தார். அங்கு முருகவேளைப் பணிந்து, யோக மார்க்கத்தை விளக்கும் 'மூலமுண்ட' என்னும் திருப்புகழைப் (766) பாடினர். 'சிவ லோகதியாகர்' என்பது இவ்வூர்ச் சிவபெருமான் திருநாமம். இதைச் *''சங்கர தியாகவந்துறை நல்லூர்'' என விளக்கியுள்ளார். இப்பாடலிற் பெருமான் சமணரைக் கழுவேற்றிய திருவிளையாடல் கூறப்பட்டுள்ளது.

பின்பு திருமயேந்திரம் (20) (மயேந்திரபபள்ளி) என்னும் தலத்திற்கு வந்து ''வண்டணி'' என்னும் பாடலைப் பாடினர். அதில் தேவி வள்ளியம்மையார் தன் மனத்திற் புகுந்து வீற்றிருப்பதை 'என்றன உளம்புகு பாங்கிமான' எனப புகழ்ந்துள்ளார். பினபு அஙகிருந்து சம்பந்தப பெருமானுடைய அவதார ஸ்தலமாகிய சீகாழியை (21) அடைந்தார்.

[* கும்பகோணத்திற்கடுத்த சுந்தரப்பெருமாள் கோயில் ரெயில்வே ஸ்டேஷனுககுத் தெற்கே இரண்டுமைல் தூரத்திலுள்ள நல்லூர் என்னுந் தேவாரம் பெற்ற ஸ்தலத்தில், வீதி விடங்கத் தியாகர் மூன்று நாள் வந்து உறைந்ததாகத் திருநல்லூர்ப் புராணம் கூறும்.]

---

ஒளிமுன்னர் கள்ளர்கள் ஓடி ஒளிவதுபோல்,
அளிமுன்னர் பாபம், அகன்றோடு கின்றதுவே.

திருக்கோயிலை வலம்வந்து பன்முறை விழுந்து வணங்கிப் பலபதிகங்கள் பாடினர். சம்பந்தப் பெருமான் தவிர வேறு தெய்வமே கிடையாதென்னும் தமது கொள்கையை, 'அமண்சேனை உபாதி கழுமலங் கற்குரைத் தோனலதில்லை தெய்வங்களே' எனக் கந்தர் அந்தாதியில் (29) விளக்கியுள்ள இவர், சம்பந்தப் பெருமானது பெருமையை மனமார வாயாரத் தமது பதிகங்களில் எடுத்தோதி யுள்ளார். சீகாழிக்குக் கிடைத்துள்ள 14 பதிகங்களில் 7 பதிகங்களில் சம்பந்தப் பெருமானது லீலைகள் பாராட்டப்பட்டுள்ளன. பண்பு இல்லாத எண்ணூயிரம் சமணரை அவர் கழு ஏற்றியதும் (770, 771, 773, 778), சமணர் கலங்க அவர் தமிழ் (தேவாரம்) பாடினதும் (775), பாண்டியனுடைய சுரப்பிணியைத் தீர்த்ததும் (770, 772), பாண்டி நாட்டில் திருநீறு பரவச் செய்ததும் (778), சம்பந்தர் கவுணிய கோத்திரத்தினர் என்பதும் (768, 778), முத்தமிழாகரன் என விருது ஊதப் பெற்றவரென்பதும் (771), பால பருவத்தினர் என்பதும் (778), அவர் ஞானத் தமிழ்ப் பாடல்களை-வேதக் கவிகளைப் பாடினரென்பதும் (770, 778) விளக்கப்பட்டுள. திருநீற்றின் சிறப்பும் (769), ஹர ஒலியின் பெருமையும் (769), நரகில் வீழ்வோர் இவரிவர் என்பதும் (769), 'பிரமபுரம்' என்பவர் மனததிலும், 'குகன்' என்பவர் மனத்திலும் முருகன அன்புடன் குடிகொள்வரென்பதும் (775), சந்தக் கவிநூல் முருக பிராற்குப் பிரியமென்பதும் (776), முருகவேள் தமக்குத் தரிசனந்தந்து சக்ஷு தீக்ஷை செய்தனரென்பதும் (773), இத்தலத்துப் பதிகங்களிற் குறிக்கப்பட்டுள. முருகவேள் வள்ளியம்மையின் மலர்ப் பாதங்களை வருடி, அவ்வம்மையாருககு உதவியாக ஆயால் ஓட்டும்

---

எப்பற்றும் இல்லார், இயலின்பம் காண்கின்றார்;
ஒப்பில் அதனை, உணரவருள் செய்குதியே!

தொண்டினைக்கூடத், தாம் அத்தொழிலுக்குப் புதிதாயிருந்தும் மேற்கொண்டு செய்தாரென்பதை—

''மலைதனில் ஒருமுனி தந்த மாதுதன்
மலரடி வருடியெ நின்று நாடொறும்
மயில்பயில் குயில்கிளி வம்பி லேகடி தொண்டினேனே''
(768) வம்பு = புதுமை.

எனக்கூறி மகிழ்கின்றார். இக்கருத்தைத் 'தினைகாவல் கொண்ட முருகா (902) என்னும் திருப்புகழிலுங் காண்க.

சீகாழிக்குரிய பன்னிரு நாமங்களில் காழி, புகலி, சண்பை, பிரமபுரம், கொச்சை, கழுமலம், பூந்தராய் என்பன இவர் பாடிய பாசுரங்களில் வந்துள்ளன.

மாதர் விஷயம் ஒன்றும் இல்லாமல் சம்பந்தப் பெருமானது பெருமையையும், திருமாலின் பெருமையையும் ஒருங்கே கூறும் ''தனதன தந்தன தந்தன தந்தன'' என்னும் அருமையான சந்தத்திலுள்ள 'சருவி யிகழ்ந்து' என்னும் (775) பாடல் மனப்பாடத்திற்குரிய திவ்விய பாடல். சீகாழியை விட்டு நீங்க மனம் வராது, அங்குச் சிலநாள் தங்கிப் பெருமானது ஆலயத்தை வலம் வந்து, உடல் பொடிப்புற உள்ளம் உலைமுக மெழுகென-இளக வணங்கி நின்று, பெருமான் சந்நிதியில் விடை பெற்றுச் சீகாழியில் இருந்து புறப்பட்டார்.

---

ஆசை யுள அளவு, பந்தம் அழுத்துமெனக்
கூசாது கூறுநரைக், கும்பிட்டு வாழ்வேனே.

சித்தர்கள் சிறப்பு 17

## முக்கா வேளை
(ரஸபதி)

மார்கழி மாதம்; வைகறை நேரம்; பக்தர்கள் பாடுவர்; கோதையர் திரள்வர்; குமரனை நினைவர், கும்மி யடிப்பர்; குதூகலம் அடைவர்; முப்பது நாளும் இது முறை. தெரிந்தோ தெரியாமலோ பல மாதங்களில் செய்த பாவங்கள், அரிய இவ் வழிபாட்டில் அழிந்துவிடும் என்பது அவர்கள் எண்ணம்.

ஒரு சமயம், நலம் சிறந்த கார்த்திகை நகர்ந்தது. மார்கழி பிறந்தது. எங்கும் பஜனைகள் எழுந்தன.

கும்மியடி பெண்கள் கும்மியடி—கொள்கை
உள்ளம் குழையவே கும்மியடி
நம்மை யளித்தருள் நம்பன் அடி உளம்
நம்பியே கும்மிய டியுங்கடி!
தையல ருக்கருள் செய்திட வேஅவன்
தாவும் மயிலினில் தான்வருவான்
மெய்யருள் செய்ஞான வேலனடி—அவன்
மேன்மையைப் பாடிய டியுங்கடி!

என்று, குதித்து மாதர்கள் கும்மி யடித்தனர். அவ்வமயம் அகத்தியர், எதிர்பாராது அவ்வழியே வந்தார். அரிவையரும் ஆடவரும், பரனைப் பாடி ஆடும் பக்திப பெருக்கத்தைப் பார்த்தார். உள்ளம் பாகாய் உருகியது. ஒருவரும் அறியாதபடி, ஒதுங்கி யிருந்து சிரவணித்தார். அவரை, அங்கிருந்த எவரும் அறிந்திலர்.

மீனாட்சி! இடுப்பு நோகிறது. முன்னேறி ஆட இனி முடியாது என்று, ஏங்கிப் பின் வாங்கினள் ஒரு ஏந்திழை.

---

எல்லாரும் இன்பம் அடையவழி செய்கின்றார்,
வல்லாராய் ஞாலத்தில் வாழ்வதுவும் கண்டோமே.

பங்கஜம்! எனக்கும் முழங்காலில் வீக்கம். அதிகம் வலிக்கிறது என்று, நகர்ந்து ஒதுங்கினள் ஒரு நங்கை.

அவர்கள் நிலையை அகத்தியர் அறிந்தார். பொல்லாப் பனியையும் பொருட்படுத்தாமல், ஆடிப் பாடி ஆண்டவனை ஆராதிக்கும் இவர்கட்கு, வாய்வு நோயா வருவது? சீச்சீ! தளர வைக்கும் இதனைத் தவிர்க்க வேண்டும் என்று, எண்ணியது அவர் திருவுள்ளம்.

அப்போது விடியற் காலம் ஐந்துமணி. குமரியிருள் எங்கும் குமுறுகின்ற நேரம். முக்காடு இட்டார். தம் முகத்தை மறைத்தார். மாதர் கூட்டத்துள் மாதவர் புகுந்தார்.

சுக்குடன் முக்கா வேளை யிரண்டையும்
சுகமாய்க் காய்ச்சிய ருந்திடவே
பக்கவலி வாங்கும்; வாய்வுகள் போமென்று
பகர்ந்து கும்மிய டியுங்கடி!

என்று, குனிந்து நிமிர்ந்து கும்மி யடித்தார்.

திடீரென்று எழுந்த புதுக்குரல் கேட்டு, தெரிவையர் பலரும் திடுக்கிட்டனர். பாடியது யார்? என்று, ஒருவரை யொருவர் மருண்டு நோக்கினர். மாதர் கண்கட்கு அகப்படா மல், மாதவர் அப்போதே மறைந்தார்.

என்ன அதிசயம்! அறிவித்தவரை அறிய இயலவில்லையே என்று, வனிதையர் அனைவரும் வருந்தினர். முக்கா வேளை, கிராமங்களில் எங்கும் முளைத்திருக்கின்றன. அதற்கு இவ்வளவு சிறந்த குணமா இருக்கிறது? அதை இன்றே சோதிப்பம் என்று நினைத்தனர்.

பயனுள அம் மூலிகையைப் பறித்தனர்; இடித்தனர்; சாறு எடுத்தனர்; சுக்கைப் பொடித்தனர்; சாற்றில் இட்டனர்; சுண்டக் காய்ச்சினர்; கஷாயம் ஆக்கினர்; இறக்கி ஆற

---

இயற்கையில் வாய்மை இணைந்திருக்கும்; அந்த
இயற்கை எவரையும், ஈர்த்துக்காக் கின்றதுவே.

வைத்தனர்; இரவில் அருந்தினர்; படுத்தனர்; அயர்ந்து கண் வளர்ந்தனர்; வைகறையில் விழித்தனர்.

என்ன அதிசயம்! கால் பிடிப்பு, கைவீக்கம், இடுப்புவலி யாவும் இருந்த இடம் தெரியாமல் மறைந்தன. உடல் இலேசா யிருநதது. முக்கால் வேளையின் மகிமையா இது ? அதன் அருமையை, இதுவரை அறியாது இருந்தோமே என்று வருந்தினர். தம்மைக் காட்டாது அறிவித்தாரை, போற்றி நெஞ்சாரப் புகழுநதனர். அதன்பின, அமலன் அருளேட பாடி யாடிப் பரவினர்.

மதிப்பிற்குரிய மணி.

சித்தர்கள் உலகில் ஒரு சிறு செய்தி. ஒரு புதுப்பானை. அதில் எட்டுப் பங்கு நீர்; ஒரு பஙகு உப்பு. அடுப்பில ஏற்றிக் காய்ச்சுவர். எரிதத சிறு தீயில் நீர் கொதிக்கும். உடனே இறக்குவர். முழுதும் ஆறியபின், மறுபடியும் காய்ச்சுவர். இறக்கி வைப்பர். இப்படியே ஏற்றி இறக்கி, முப்பத்திரண்டு தரம் முயல்வர். வெம்பிப் பானை வெடித்து விடாதபடி, கா அம்பா! கா என்று, ஒருமை உணர்வால், திரிபுர சக்தியைத் தியானிப்பர்.

சுண்டக் காய்ச்சி எடுத்த நீரில், முக்கா வேளைச் சாற்றைக கலப்பர். அதன்பின அது, முப்பு எனற பெயர் பெறும்.

*(முப்புக் காணும் முறைகள் பல; அவைகளுள் இது, பயனுள சித்தாகள் கூறும் பாலா பாடச் செயதி.]*

உப்பை யறிந்தவன் வாதி; உணவில் உப்பை ஒழித்தவன் யோகி. பண்புடைய இது, இந்நாட்டுப் பழமொழி.

தட்டையான வெள்ளித் தகட்டை, தேஙகாய் போலத் திரட்டுவர். அதனுள் மேற்சொன்ன முப்புவை இடுவர்.

---

பயனைக் கருதிப் பலசெயல்கள் செய்யின்,
கலகலக்கும் சூழ்நிலை ; கதிவிலகிச் செல்லுமரோ.

ஒன்றரை பலம் பாதரசத்தை உறவாட விடுவர். கஜபுடம் செய்வர். அதன்பின் எடுப்பர்.

[கஜபுடம் என்பது, எடுப்பான ஒரே பெரியபுடம் இட்டு எடுப்பது.]

தேங்காயைப் பிளப்பர். வெள்ளித் தகட்டின் ஆவியும், முப்புவும், பாதரசமும் ஒருங்கு கலந்து ரஸமணி ஆகும். அதை அரைஞாணில், அல்லது கரத்தில கங்கணமாகக் கட்டுவர். தூய இம்மணியின துணையால், காட்டில் சிததர்கள் கலங்குவது. இல்லை, குகைகளில் அஞ்சாது குடியிருககின்றனர்.

தேடையிலே புலிகரடி ஏனம் பாம்பு
சிவமணியைக் கண்டவுடன், தண்டம் பண்ணும்;
வாடையிலே சித்தரெல்லாம் வரவா என்பார்.

[ஏனம் - காட்டுப் பன்றி, சிவமணி - ரஸமணி, தண்டம் - வணக்கம், வாடை - (ரஸமணியின்) வாசனை.]

போகர் இந்த ரஸமணி விஷயமாக, இப்படி விரிவாகப பல செய்திகளை விவரிக்கிறார். இது சித்தர்களின் இரண்டாவது பாலர் பாடச செய்தி. இப்படியே அவர்கள், வரிசைக் கிரமப்படி, தஙகள் அநுட்டானஙகளை விளக்கி யிருக்கின்றனர்.

இதை மீறி, பில்லி, சூன்யம், வைப்பு, ஏவல் முதலிய அராஜகச செயல்களை, இரக்கமற்ற அரகக மனத்தர் பலர் எழுப்பியுளர். அவர்கள், கருங்கோழி ரஸமணி, நரமேதை ரஸமணிகளைச் செய்துகொண்டு, பாதக காரியம் பல பண்ணியுளர். இந்த அநியாய முறைகளை அன்பர்கள் அறியவே வேண்டா என்ற எண்ணத்தால், அவைகளை உருவாக்கும் முறைகளை, அமிர்தலசனி அறிவிக்கவில்லை.

முன்னும் பின்னும் உணர்ந்து வேதிக்கும் செயல்கட்கு, பெரியோர்கள் வேதை என்று பெயரிட்டுளர். இவைகளால், உலோகங்களையே மாற்றிவிடுவது சித்தர்கள் மரபு.

---

**வினையாற்றும் பல்லோர் வெறிகொண்டார்; அன்னோர்**
**தினையளவு ஓய்வு, தினம்கொள்ளல் நல்லதரோ.**

**தாளென்ற தங்கமது நீருருக்கால்**
**சகத்திற்கு ராயனென்று சாற்றல் ஆமே!**

[*நீருக்கல் - பொடியாம்படிப் பஸ்மித்தல். ராயன - ராஜா.*]

செத்தமணி, ஜீவமணி என்று, ரஸமணிகளில் இருவகை.

செத்தமணி - ஆரவாரம் எழுப்பி அழிவு செய்யும்; இறுதியில தானும் அழியும். தன்னைத் தோற்றுவித்தாரையும் சாகடிக்கும்.

ஜீவமணி - எந்த உலோகத்தில் கூட்டினாலும் கலக்காது. உருகாது. மேலெழுந்து மிதக்கும். அதுபோல்வதுதான் ஜீவசமாதி. ஜீவமணியைக் கண்டு பிடித்து ஜீவ சமாதியில் இருக்கும் சித்தர்கள் பலர், இன்றும் பல தலங்களில் கரந்து இருக்கின்றனர்.

அவர்களைச சிலர் அணுகுவர். ஆன்மார்த்த வழியை அறிவியுங்கள் என்று, வாய் கேட்கும்; தங்கம் செய்யும் முறைகளை, தயவுசெய்து சொல்லுங்கள் என்று இதயம் கனிந்து இறைஞ்சும். அதுகேட்டு அவர்கள் குறுநகை புரிவர்.

அதற்கு இச்சா பத்தியம் இருக்க வேண்டும்; அதற்குச் சம்மதமா? என்று அவர்கள் அறிவிப்பர்.

இச்சா பத்தியம் என்பதற்கு, வறுத்தபுளி, சுட்ட உப்பு எனபது என்று இன்றைய வைத்தியர்களின் அறிவிப்பு. சித்தர்கள் தீர்ப்பில், எதனில் எதனில் இச்சை யெழுமோ அதனில் அதனில் பத்தியம் வேண்டும்; அஃதாவது, விரும்பற்கு உரியவைகளில் இருந்து விலகி யிருக்க வேண்டும் என்பதுதான். அவர்கள் உரைக்கும் குறிப்பை, நம்மால் உணர முடிவது இல்லை. அநியாய மரணததை நினைக்கும்போது, அஞ்சுகிறது எவர் மனமும்.

---

மூலப பொருளிறைவன்; முன்னிற்கும் ஞாலநிழல்;
சீலம் உணர்ந்து, சிவமாகி நிற்போமே.

ஸ்வாமி! இருந்தார்போல் இருந்து சாவது ஏன்? என்று கேள்வியை எழுப்புவர்.

ஈஸ்வர ஆண்டு பிறப்பது ஏன்? என்று, சிரித்தபடி ஒரு வினவை எழுபபுவர் சித்தர்கள். அவர்கள் முன்னின்று பதில் சொல்ல, எவராலும் முடிவது இல்லை. அதனுல் அவர்களே, தாது கெட்டு என்று விடை தருவர். தாது வருஷம் தீர்ந்தால், ஈஸ்வர ஆண்டு பிறக்கும்; அதுபோல், தாது விரையமானுல் எவரும் மரணம் எய்துவர் என்பதை, அழகாக அவர்கள் அறிவிக்கும் அருமையே அருமை.

இநத உலகில் இருக்கிறோம். உடம்புகளொடு உறவாடு கிறோம். இருக்கும் சூழ்நிலே, எவர்க்கும் இச்சையை எழுப்பு கிறது. என செய்வது யாம் எனில், கூழுக்கும் ஆசை; மீசை யிலும் மோகம். இவர்களை வாழ்விக்க எவராலும் ஆகாது— என்று எண்ணுவர். கேளுங்கள்—எனறு மேலும் கூறுவர்.

எருக்கிலே பழுப்பது ஏன்? எருமைக் கன்று சாவது ஏன்? பாலற்றுப் போன பரிபவநதான். தெரிகிறதா! உடலில அமுத சத்துவத்தை, கருத்தொடு என்றும் காப்பாற்ற வேண்டும். விரையம் செய்தால், விரைவில உடலம் வீழ்ந்துவிடும்.

பெண்ணமையில், தெய்விக சக்தி பெருகியுளது. அதை அறிந்து, அவர்களைப பரையின் அமிசர் என்று இதயம் கனிந்து இறைஞ்சுபவர், எனறும் உலகில் இன்பம் எயதுவர். திரு மூலர் கூறும் பர்யங்கி யோக தத்துவம் இது.

பிருங்கி என்பவர், ஒரு பெருஞ்சித்தர். அவர், கூடு விட்டுக் கூடு பாயும் குணதிலகர். அதன் மூலம், பலசமயம் பூவையர் உடலுள் புகுந்தார். ஆடவரை மணந்தார். மகப் பேறு அடைந்தார். வயோதிகை யாஞர். பிறிதொரு சமயம்

---

பொல்லா தவரும், புனித இறையருளால்
நல்லாராய் மாறும் நலமுணர்ந்து கொண்டோமே.

புருஷ உடலில் புகுந்தார். ஒவ்வொரு பருவ சூழ்நிலையையும் உணர்ந்தார். தநயர் பலர்க்குத் தந்தை ஆயினர். தேர்ந்த அனுபவத்தில் தெளிந்தார்.

உடம்பால் ஆடவர். உள்ளத்தால் பலவீனர். மாதர்கள் முன், மந்ததரம் ஆகும் அவர்களது பரிபவத்தை எண்ணி நெஞ்சம் பதைத்தார். வீணான ஏமாற்றம் உலகம் என்று வெறுத்தார். ஆண்களைக் காப்பாற்ற, ஏராளமான நூற்களை எழுதினர். அவர்முன் ஒருநாள் அம்பிகை தரிசனம் ஆயினள். முனிவர், இருகரங் கூப்பித தேவியை இறைஞ்சினர்.

பிருங்கீ! ஆண்பிள்ளைகளின் தவறுகள் ஆயிரம் ஆயிரம். அவைகளை முதலில் அறிந்துகொள்! வீணாகப் பெண்களை வெறுக்காதே!

தாயே! தங்கட்கு அடியேன் தலை வணங்குகிறேன்; கோணைத் தனமான கோலம் கொண்டு, ஆண்களின் அறிவுக் கண்ணைக் குருடாக்கும் மாதர்கள் உலகம் மறையட்டும் என்பது தான் என் எண்ணம்.

பிருங்கீ! அன்னை ஒருத்தி உன்னை அருளினள். கோலம் செய்து கொள்வது கோதையர் கொள்கை. மாதர் எனும் சொல்லிற்கே அது மரபு. தாயை, தமக்கையை, தங்கையை, மகளை அறிவதுபோல், எந்த மாதரையும் எண்ணுவது இயல்பு. மாறி நினைப்பதும், மயக்கினர் என்பதும் மடத்தனம். ஆணும் பெண்ணும் இயற்கையின் அமைப்பு. அதை அறிந்திலை. ஆண் உலகம் மட்டும் வாழ நினைத்தாய். அது குறித்த மாபெரும் உன் நூற்கள் பல மறைந்துவிடும்.

மண்டைக் கொதிப்பு மாறவேண்டும், அறிவில் குளிர்ச்சி அமைய வேண்டும். நெலலிக்காய் தைலம் தேய்த்து நீராடு!

---

**இந்திரிய நிக்கிரகம், இம்மை மறுமையினில்**
**செந்திருவைச் சேர்த்துச் சிவமாக்கு கின்றதுவே.**

மற்றவரும் அறியுமாறு செய்! முதலில் முக்கா வேளேயில் உறவுகொள்! முறையாக சித்தர்கள் நூற்படி முன்னேறு! என்று அருளி, உருவம் கரந்தார் உமாதேவியார். அதன்பின், பிருங்கி முனிவர் கண்ட ஆமலக தைலம், பிருங்காமலகம் என்னும் பெயரைப் பெற்றது.

அதன்பின், எதிலும் அவசரமாக இறங்காமல், அமைதியான முறையில், பெருஞ்சித்தர் நூற்களைப் பின்பற்றி, ஜீவ ரசமணியை உருவாக்கி, சாதனை செய்து,

'தூங்காமல், துயராமல், சுக்கிலமே மேலேற,
போங்காலம் பொய்யாக, புனிதச சமாதியினில்
நீங்காமல் தாமிருந்து, நீளும் உலகனைத்தும்
ஆங்காங்கே சென்றருளால் ஆநந்தம் எய்தினரே'

என்றபடி, பாரத பீஷ்மர்போல் பயனெய்திய பிருங்கி முனிவர், சமாதியில் இருந்தபடியே எங்கும் சஞ்சாரம் செய்கின்றார். வாழ நினைவார்க்கு, அவர் முக்கா வேளேயின் வழிமுறையைக் காட்டுகின்றார் என்று அறிவிக்கின்றார்கள் ஆன்றோர்கள்.

வாழ்க சித்தர்கள் வழிமுறை!

ஓம்.

---

## விநாயக சதுர்த்தி

[ ஆ. கி. ரங்கராஜன். ]

விநாயக சதுர்த்தி என்றவுடனேயே யானையின் முகம் நம் முன் தோற்றமளிக்கிறது. யானையானது உலக உயிர்களுள் கம்பீரத் தோற்றமுடைய தொன்றாகும். 'ஏன் விநாயகருக்கு யானைமுகம் ஏற்பட்டது? என அடியார்கள் உலகத் தாய்க்கு ஓர் வினா விடுக்கின்றார்கள். "தாயே! இறைவியே! உனது படைக்கும் தொழிலில் உன் மகனுக்கு மட்டும் வேடிக்கையான

---

தன்னை அடக்கும் தகுதியுளர், இவ்வுலகந்
தன்னைத் திருத்தும் தகவினர்கள் ஆவாரே!

வகையில் யானை முகத்தை ஏன் அளித்தாய்?'' என, உள்ளன்பும் உவகையும் கொண்டு, அதிக உரிமை கலந்த குறும்புத் தனத்துடன்,

'' ஈஸ்வரியே! நின்படைப்பில், இனியநினதொரு சுதனுக்(கு)
ஆஸ்யமுறும் ஆனைமுகம் அளித்திடலேன்? விடை புகலாய்!''
—ஸ்ரீ அபிராமி மாலை

என்று கேட்கிறார்கள்.

பேதமற்ற பரம்பொருளாகிய இறைவன், அடியார்கட்கென பற்பல நாமரூப பேதங்களாய்த் தோற்றமளிக்கின்றான். அத்தோற்றங்களுள் ஒன்றே விநாயகனாகிய யானைமுகத் தோற்றமும். அருணகிரிநாதர், விநாயகனை யானை என்றே குறிப்பிடுகின்றார். அவர் குறிப்பிடுவது, எத்தகையோராலும் எதிர்த்து வெற்றி கொள்ள இயலாத ஆற்றல் படைத்த, அத்தகைய ஆற்றலை அடியார்கட்கு அளிக்கக்கூடிய, எக் கொடியரும் கண்டு அஞ்சும் தோற்றமுடைய, எப்பொருளும் தானேயாகித் திகழக் கூடிய இறைவனின் தோற்றம் என்பதையேயாம்.

விநாயகன் ஏன் யானைமுகம் கொண்டான் என்பதைக் காண்போம். அசுரகுலம் ஒழிந்திருந்த ஒரு காலத்தில் ஒரே ஒரு அசுரன் மட்டும் தப்பி, தன் குலாசாரியரான சுக்கிராசாரியாரை நாடி, அசுர குலம் தழைக்க அருள்செய்யுமாறு வேண்ட, அவரும் ஓர் மங்கையை உண்டாக்கி, அவளை நோக்கி "தவம் புரியும ஒரு முனிவரைக் கலந்து, தானவகுலம் தழைக்குமாறு செய்க!'' எனவிடுக்க, அவளும் முனிவர் முன் அமர்ந்து தவம்புரிவாள் போல் நடிக்க, அசுர குரவர் தமது சக்தியால் இரு யானைகளை சிருஷ்டித்து, அவை ஊடிப் புணருவது போன்ற மாயைத் தோற்றத்தை உண்டாக்க, அதனால்

---

**எனக்கிது வேண்டுமென எண்ணாமல், ஞாலம்
தனக்கிது வேண்டுமென எண்ணுகின்றார் தக்கோரே**

தவம் கலந்த அம் முனிவர் அசுர மாயையில் அகப்பட்டு, அதன் விளைவாய் அம் மங்கைக்கு யானைமுகமுடைய அசுரன் தோன்றினன.

சுக்கிராசாரியாரின் யோசனைப்படி அவ்வசுரன் சிவபெருமானைத் துதித்து தவமியற்றினன். சிவபெருமான் தோன்றி "யாது வரம் வேண்டும்?" எனக் கேட்க, அவன்,

"மிக்கதோர் அமரரால், வியப்பின் மானிட
மக்களால், அவுணரால், மற்றை யோர்களால்,
தொக்குறு விலங்கினுல் துஞ்சிடா வகை
இக்கணம் தமியனேற் கீதல் வேண்டுமால்;"

—கந்தபுராணம்.

எனவேண்ட அவ்வாறே சிவபிரான் வரம் அளிக்க, அவ்வசுரன் அதனுல் அதிக வலிமையும் அகந்தையும் கொண்டு அமரர்களையும் அகில உயிர்களையும் வருத்த, அதனுல் துன்புற்ற அனைவரும் இறைவனைப் பிரார்த்திக்க, இறைவன் யானைமுகத்துடன் அவதரித்தனன. அவ்வடிவில் சக்தி தத்துவமும், சிவதத்துவமும் விஷ்ணு தத்துவமும் உள்ளதை இமையோர் அறிந்து விநாயகக் கடவுளாகிய அப் பெருமானைப் பலபடப் புகழ்ந்து போற்றி இறைஞ்சினர்.

விநாயகன் யானைமுக அசுரன்மீது போர்தொடுத்து, அவன் அழியா நிலை பெற்றிருப்பது கணடு, தனது தந்தங்களிலொன்றை முறித்து அவன்மீது வீசி அவனுடலைப்பிளக்க, அவன பெருச்சாளி வடிவம் பெற்று, விநாயகனைச் சரணடைந்து, அக் கடவுளின ஊர்தியாகும் பேறு பெற்றுன். அவ்வசுரனின பயங்கர ஆற்றலையும், மூர்க்கத் தனத்தையும், அவனைப் போரில் வென்ற விநாயகனின் பேராற்றலையும் வியந்துதான் அருணகிரியாரும்,

---

ஆமை புகுந்த அருங்குளம்போல் ஆகாமல்,
தீமை விலகத் திருவருளைப் போற்றுவமே.

'தேடும் கயமா முகனைச் செருவில்
சாடும் தனியானை...'

எனக் கந்தரனுபூதியில் விநாயகனைக் குறிப்பிடுகின்றார்.

* * * *

விநாயகன் எனில் 'தன்னையன்றிப் பிறிதொரு தலைவனற்றவன் என்றும், வினைகளை அகற்றுபவன் என்றும் பொருளாகும். அவனையே நாம் விக்கினேஸ்வரன் என அழைக்கின்றோம். எததொழில புரியத தொடங்கும்போதும், எங்கு நாம் செல்லத் தொடங்கும் போதும் முதலில் விநாயகனைப் பிரார்த்திப்போமாயின், எத்தகைய தடைகளும் நீங்கி வெற்றி காண்கிறோம்.'

விநாயகன் பேரருளாளனுதலாலும், வணங்குவோர்க்கெல்லாம் வழங்குவோனுதலாலும் நாம் விநாயகனை முதற் கடவுளாகக் கருதி வணங்குகிறோம். பாமரரும் உய்யவேண்டிப் பெரும் கருணை கொண்டும், தப்பித தவறித் தன்னை ஒருகால் எவரேனும் மறந்துவிடக கூடும் என்பதற்காகவும், சந்துபொந்துகள், மூலை முடுக்குகள், ஆற்றங கரைகள், குளக்கரைகள், குக்கிராமங்கள், நீதி ஸ்தலஙகள் முதலிய பல இடங்களிலெல்லாம் கோயில் கொண்டு, எவ்வுயிருக்கும் தன்னைப் பற்றிய நினைவை யூட்டிக் கொணடு திகழ்வதால், விநாயகன் அடியார்க்கு எளியவன் என்பதை அறிகிறோம்.

ஆண்டுக்கு ஒருமுறைதான நாம் அவ்விநாயகப் பெருமானை நினைவு கூர்ந்து, நமககுத தோன்றும் பதார்த்தங்கள் கனிவர்க்கங்கள் முதலியவற்றைத் தயாரித்து, அந்த இறைவனுக்கு வைத்துப் பணிகின்றோம். எனினும் விநாயகனுக்கு என விரதம் இருகக வேண்டுமாயின், மாதம் இருமுறை வரும் வளர்பிறை, தேய்பிறை சதுர்த்தியன்று இருந்தால் சிரேஷ்டமானதாகும். ஏன் ? ஒவ்வொருநாளும், ஒவ்வொரு

---

மிகையான செல்வத்தால், வாழ்க்கை மெலியும்;
தகவாம் அருட்செல்வம் தான்வளரப் போற்றுவமே.

போதும். ஒவ்வொரு கணமும் விநாயகனை நாம் வாழ்த்திஞல் அது நமக்குச் சுமையா ? இல்லை. அதற்குப் பதிலாக நம்மைக் காக்கும் பொறுப்பாகிய சுமையை விநாயகனே ஏற்றுக் கொள்கின்ருன்.

பொதுவாக நாம் எந்தக் கடவுளை வணங்கத் தொடங்கும் போதும், விநாயகப் பெருமானையே வணங்கி வழிபட்டுப் பின் தொடஙகுகின்ருேம். இதை ஆராயும் போது, விநாயகப் பெருமானின் தகைமையை அளவிடடுச சொல்ல இயலாததாய் உளது. விநாயகப் பெருமான், பாவச் சேற்றில் அமிழும் உயிர்களைத் தன் துதிக்கையால் பற்றி இன்பமாகிய உயர் நிலையில் சேர்க்கின்ருன். அவர்தம் மாசுகளை நீக்குகின்ருன். ஓயாது எடுக்கும் பிறவிகளால் ஏற்படும் வேட்கையைத் தணிக்கின்ருன். எனவே விநாயகப் பெருமானை வானவரும், மானிடரும், முனிவரும் மற்றவரும் தம் நாயகனுக, தலைவனுக, இறைவனுகக் கொண்டு பணிகின்றனர். இதனைப் பின் வரும் பாடல்கள் விளக்குகின்றன.

விநாயகனே வெவ்வினையை வேரறுக்க வல்லான் ;
விநாயகனே வேட்கை தணிவிப்பான்—விநாயகனே
விண்ணுக்கும் மண்ணுககும் நாதனுமாந் தன்மையினுல்
கண்ணில் பணிமின் கனிந்து !

—கபிலதேவ நாயஞர் அருளிச் செய்த
மூத்தநாயஞர் திருஇரட்டைமணிமாலை 5ம் பாடல்.

எங்கே ரமுமுனை நினைத்திடு வோர்துயர்
மினனே போல்மறை வுறவருள புரியும்
மன்னே! மாபெரும் மகிமையை உடையாய் !
பொன்னே நிகர்ஒளிர் பூதிமா முகனே !

—விநாயகர் அந்தாதி : 15ம் பாடல்

[பூதி - யானை, அனுக்ரகம்.]

---

பணிவாம் அடக்கம், பலபயனைச் செய்யும் ;
தணிவாம் மனமென்று, தக்கவர்சொல் கின்ருரே.

## விடையவர் தாள்

(K. S. சுந்தரமூர்த்தி, புவனகிரி.)

இறைவனைப் போற்றி வாழ்ந்த பல அடியார்களுடைய வாழ்கையைப் பற்றி நாம் சிந்திக்கும்போது நமக்குச் சில உணமைகள் தெரியவரும். நமது குறையுடைய வாழ்க்கையில் நாம் அநுபவித்து வருகின்ற நிகழ்ச்சிகளைக் கண்முன்பு கொண்டு வருவோம். நம்மில் சிலரை, ஆண்டவனை துணை யாகப் பற்றிக் கொண்டவர்களாக நாம் கருதுகின்றோம். இருக்கின்றவர்களில் தான் ஒருவனே உண்மையில பக்தி உடையவனாகவும், நமக்குத்தான பூரண அறிவு இருப்பதாக வும் எண்ணுகினறோம். அநேகர் இனனும் புரிந்து கொள்ளாத, புரிந்து கொள்ள முடியாதவைகளை யெல்லாம் தனக்கு நன்றாகத் தெரிநது இருப்பதாக கருதுகின்றோம். உண்மையில அப்படி ஏதாவது இருக்கிறதா எனறால் அதுதான் இல்லை. இப்படி சிறியேன கூறுவதில் சில அன்பர்களுக்கு மனம் புண்படலாம். அப்படி வேகமுடையவர்கள் தயவு செய்து சிறிது சிந்தித்துப் பார்க்கும்படி கேட்டுக் கொள்ளுகினறேன்.

இறைவன் கருணையால் இந்த உடம்பு நமக்கு வந்தது. சில ஆணடு இளமையில் கழிந்தது. மனைவி வந்தாள். மனம் அவளை சுற்றியே நின்றது. பின மகனோ (அல்லது) மகளோ பிறந்தது. வளர்ந்தது. இபபொழுது அவர்களிடத்தில் மனம் சென்றது. பிளளை படிததான. ஆனால் படியவில்லை. அழகு இருந்தது. ஆனால் அறிவு இலலாமல ஆயிற்று. ஊர் சுற்றி னான். அது அறிந்து வீட்டிற்கு மருமகள் வநதாள். வந்தவளுக்கு மகன் உரிமையானான. அதன் காரணமாக வீட்டில் கசப்பு விளைந்தது. குடும்பம் தனி நிலை ஆயிற்று. உலக விஷயத்தை அலசிய அறிவின பெருமையெலலாம் இங்கே அடங்கி ஒடுங்

அருளறத்தைக் கொண்டோர்கள், ஆள்வார்கள் தம்மை ;
மருளறத்தில் தோய்வோர், மதிமயங்கு கின்றாரே.

கியது. இதற்கு வழிதெரியவில்லை. கவலை வந்தது. இந்தத் துன்பத்தைக் கண்டு கண்டு மனம் சலிதது விட்டது.

'' பெண்டிர் மக்கள் சுற்றம் என்னும்
பேதைப் பெருங்கடலை
விண்டு பண்டே வாழ மாட்டேன்
வேதனை நோய் நலியக்
கண்டு கண்டே யுன்றன் நாமம்
காதலிக் கினறது உள்ளம் ''

என்றார் சம்பந்தர்.

இதன் முடிவு ஆண்டவனை நினைக்க முற்பட்டோம். கடவுளிடத்தில் பற்று இருப்பவர்களில் பெரும்பாலோர் தங்களுடைய வேதனையை எபபடியாவது குறைததுக் கொள்ள வோ அல்லது மறைத்துக் கொள்ளவோதான் ஆண்டவனை ஆதரிக்கினறோம். ஆனால் இதுதான் உண்மையா எனறால் இதற்கும் விதிவிலக்கு உண்டு. எப்படி?

இந்தபபடி இருப்பவர்கள் யார்? இறைவனை உண்மையா கவா பற்றுகினறனர். ஏதோ நடிக்கினறனர். அந்தக் கடவுளை யும் ஏமாற்றப பார்க்கின்றனர். ஏமாந்தவரை யெல்லாம் ஏமாற்றும் ஈசன் என்பார் இராமலிஙகர். எதில ஏமாந்தவர்?

உணமையில் எதனிடத்தில் நேசம் இருகக வேண்டுமோ அங்கு இருபபதில்லை. எதில் இருக்கக கூடாதோ அதில் பாசம் வைபபது. ஏடடிக்குப் போட்டியே, முடிவு ஒரு பிடி சாம்பலே.

ஆனால் அடியவர்கள் அப்படி இல்லை. நினைவு வந்த நாள் தொடங்கி நேசம் ஆண்டவன் இடத்தில் வைத்து வாழ்நதார்கள். தனது பொறி, புலன்களுக்கு எது உணவாக கிடைத்தாலும், அதை இறைவன் தனக்களித்ததாக எண்ணி மகிழ்கின்றனர்.

---

ஆசை வலையில் அகப்பட்டுக் கொள்ளாமல்,
நேசம் சிவத்தின்பால், நீடிக்க நிற்போமே

நன்று என்பதும், தீது என்பதும் அவர்களுக்கு இல்லை. எல்லாம் நம்பன் அருளே. இது பொயயா? இல்லை. உண்மையே. எது நன்று? எது தீது என்று தெரியாத நமக்கு நம்பன் அருள் தெரியாது இருக்கலாம். 'நனறே வருகினும், தீதே விளைகினும் நான் அறிவது ஒனறேயும் இல்லை' யென்றிருக்கும் அபிராமி பட்டரைப் போன்றோர்ககு எல்லாம் தெரிந்தே இருக்கிறது. அவர்களுடைய தூய வாழ்க்கையைப் பார்த்தால் அவர்களுடைய பெருமை எஙகே? நம்முடைய சிறுமை எஙகே ?

என்னை யே நம்பி யிருக்கும் அன்பனுடைய சுகதுக்கங்களை நான் கவனித்துக் கொள்கிறேன் எனறு கீதையில பகவான் கூறுகின்றார்.

அபிராமி பட்டருக்கு அப்படியொரு சோதனை நிகழ்ந்தது. அமாவாசை தினத்தைப் பௌர்ணமி யென்றார். மன்னன் வெகுண்டான். பிததுப் பிடித்தவரோ என்று மதி மயஙகிக் கூறி தண்டனையும் தந்தான். விளைவு அன்று பௌர்ணமி ஆயிற்று. எல்லாம் அம்மையின் அருளே. மனனன் ஓடி வந்து பட்டரிடம் மன்னிபபுக் கேடடான். உள்ளத்தில் அம்பிகையின் அருள் பரிபூரண ஒளியைத் தந்து கொண்டிருநதபடியால் பட்டரின் வாக்கில் அனுபவிததது வெளியாயிற்று.

சுந்தரர் வாழ்க்கையில் பொன்னை ஆற்றிலிட்டு குளத்தில் எடுக்கப் போனபோதும்,

திருமறைக் காட்டில் வேதத்தால் பூசித்து அடைக்கப் பெற்ற கதவைத் திருநாவுக்கரசர் திறக்கப் பாடிய போதும்,

மணிவாசகர் திருப்பெருந்துறையில் இருக்கும்போது மன்னனது ஓலையைக் கண்டு என்ன தெரிவிப்பது என்று இறைவனை நோக்கி நிற்கும் போதும்,

---

**சுயநலத்தில் என்றும் சுழிக்காமல், தெய்வ**
**மயமாகி, வாழும் மதிகொள்நீ என்மனனே!**

கழுமரத்தில் பட்டினத்து அடிகள் நின்றபோதும், திருக்குறிப்புத் தொண்டர் அடியவர் வேட்டியைத் துவைத்து உலர்த்த முடியாததால் துணி துவைக்கும் கல்லிலேயே தலையை மோதிக் கொள்ளப் போன போதும்,

மனைவியைப் பற்றி புனல் மூழ்க முடியாது தவித்த திருநீலகண்டர் முன்பும் இறைவன் அருள் வெளிப்பட்டது.

இவையெல்லாம் நாம் சமய நூல்களை நுணுகிக் காணும் போது தெரிய வருகிறது.

இதனையே காரைக்கால் அம்மையார் வாழ்க்கையிலும், மற்ற கனியும் கொண்டு வருமாறு கணவனுகிய பரமதத்தன் பணித்தபோது அம்மையார் கொண்டு வருவார் போல் உள்ளே சென்று இறைவனை வேண்டும் போது அவர் இருந்த நிலையை நமது சேக்கிழார் சுவாமிகள் கூறுவார்.

அம்மருங்கு நின்று அயர்வார்
அருங்கனிக்கு அங்கு என்செய்வார்
மெய்ம்மறந்து நினைந்து உற்ற இடத்து
உதவும் விடையவர் தாள்
தம்மனங் கொண்டு உணர்தலுமே அவர் அருளால்
தாழ்குழலார்
கைம்மருங்கு வந்து இருந்தது அதிமதுரக்
கனி ஒன்று.

காரைக்கால் அம்மையார் பக்தி அப்படி இருந்தது. நாம் இறைவனை நினைக்கும் போது வீட்டு நினைவு வரும். மனைவி மக்கள் நினைவு வரும். கடன்கார நினைவு வரும். காம நினைவு வரும். பேராசை வரும். பேதிக்கும் வகையில் புல நினைவு வரும். பூசையா நாம் செய்கிறோம்? பேருக்குப் பூஜை. ஐயோ

---

உலகர் அனைவரும் ஓர்குடும்ப மக்கள்;
பலகற்றும் ஈதறியார், பண்பிழந்து போவாரே

அதை எப்படிக் கூறுவேன்? மனத்தை அளக்கும் கருவி இருந்தால் நம் அசூயை யெல்லாம் வெட்ட வெளிச்சம்.

குருநாதன் நமக்கு இருந்தால் நல்லது. நமது நெஞ்ச அழுக்கை யெல்லாம் வெளுக்கும் ஞான ஆரியன் அவனே. நம்மைப் போன்ற சிறுதொழிலும் சிறு அறிவும் உடையவர் களுக்கு அவரே கதி. அவர் வழி நின்ருல் நலம். அல்ல வென ருல் சலம்.

'நீலச் சிகண்டியில் ஏறும் பிரான் கோலக் குறத்தியுடன் வருவான'. என்றைக்காவது வருவானே? எந்த நேரத்திலும் வருவான். யாருக்கு வருவான்? குருநாதன் சொன்ன சீலத்தைத் தெளிந்து அறிபவர்களுக்கு. சீலம் தெளிந்துவிட்டால் சிவயோகி யாகலாம். கணக்குக்கு அடங்காத காலத்தையும் வென்று இருக்கலாம். இல்லை யென்ருல் விரைந்து சாகலாம். இப்படி யார் கூறுவார்? நமது அருணகிரியாரே.

ஆகையால் நாம் அவர் வாக்கை நினைவு கொண்டு இறைவன் அருளை உண்மையில் விரும்பி வாழ்வோம்.

---

## வள்ளலார் கண்ட சமரச சன்மார்க்கம்

(தர்மா ராஜாராமன்)

இருபதாம் நூற்ருண்டில் வாழும் எந்தத் தமிழனும் பத் தொன்பதாம் நூற்ருண்டில் அருட்சோதியாக விளங்கிய அருட் சோதி வள்ளலாகிய இராமலிங்க அடிகளை அறியாதிரான். வள்ளலாரை தெய்வீக உலகத்திற்கு அறிமுகப்படுத்திய இரு நெறிகள் அவரது சமரச சன்மார்க்க நெறியும், ஜீவ காரு ணிய நெறியுமாகும்.

இடைக்காலத்தில் தமிழகத்தில் தோன்றிய சாதி வேறு பாடு மக்களிடையே பல பிரிவுகளை உண்டாக்கியது. இந்த

---

உள்ளத் தமைதி உயர்வினபம்; நல்குமருள்
வெள்ளம் படரும்; முழுகிவினே யாடுவமே.

சாதி சமய சழக்குகளை வேரோடு பிடுங்குவதற்கு சைவ நாயன் மார்கள் பாடுபட்டனர்.

'' சாத்திரம் பலபேசுஞ் சழக்கர்காள்
கோத்திரமும் குலமும் கொண் டென்செய்வீர்
பாத்திரம் சிவமென்று பணிதிரேல்
மாத்திரைக்கு ளருளும் மாற்பேறரே ''

என்று திருநாவுக்கரசர் கூறியதை நாம் அறிவோமல்லவா ?

பத்தொன்பதாம் நூற்றாண்டில் சாதி சமய வேறுபாடு தலைவிரித்தாடத் தொடங்கியது. இந்த வேறுபாட்டை நீக்க வள்ளலார் தமது சமரச சனமார்க்க நெறியைப போதித்தார்.

சமரசம் என்ற சொல்லே அதற்குரிய பொருளை நமக்கு அறிவிக்கிறது. யாண்டும் நீக்கமற நிறைந்துள்ள இறைவனை அடைவதற்குரிய பொது நோக்கை சமரசம் என்ற சொல் உணர்த்தும்.

இனி, சன்மார்க்கம் என்பது 'சத்தென்னும்' செம்பொருளை உணர்த்தும் மார்க்கமாகும். 'சத்' என்றால் உண்மை என்று பொருள். உண்மை ஒன்றுதான். அதன் வடிவங்கள் வேறாக அமையலாம். நாம் பல இனிப்புப் பண்டங்களை உண்ணுகிறோம். அந்தப் பண்டங்கள் யாவற்றுக்கும் பொதுவான சுவை இனிமை. ஆனால் அந்த இனிமை கொள்ளும் வடிவம் வேறு. அதேபோல, பற்பல மார்க்கங்களில் காணப்படும் ஒருண்மையே சன்மார்க்கமாகும்.

இந்த மார்க்கத்தைக் கடைப்பிடிக்க மனிதன் தூய்மை அடையவேண்டும். தூய்மை என்பது தூய உடைகளை உடுத்துவதில் மட்டும் அமைவதில்லை. அகத்தை முதலில் தூய்மையாக்க வேண்டும். மனிதனை மனிதன் அழிக்கத் தூண்டும் உட்பகைகளான அழுக்காறு, அவா,

ஈசன் உருவே உலகமென எண்ணுகின்றோர்,
பேசுகின்ற யாவும், பெருமைமறை யாகும்மே.

வெகுளி, இன்னுச் சொல் ஆகியவற்றைக் களைதல் வேண்டும். புறத்தே தூய்மையாக அமைவதற்கு மனிதன் கண்மூடிப் பழக்க வழக்கங்களை ஒழித்து, தீண்டாமையை விலக்கி, வகுப்புப் பூசல்கள முதலியவற்றை விலக்குதல் வேண்டும்.

இத்தகைய ஒரு நெறியை வள்ளலார் விரும்பினுர். அவர் கண்ட கடவுள் இவ்வுலக சாதிமத வேறுபாடுகளுக்கு அப்பாற்பட்ட கடவுள். அவர் கண்ட சோதி பிறவற்றைத் தனனுள்ளே அடக்கி, யாவர்க்கும் என்றும் எப்பொழுதும் காணததகும் வண்ணம் அமைந்த சோதி.

" சாதிமதஞ் சமயமுதல் சஙகற்ப
விகற்பமெலாந் தவிாநது போக
ஆதிநடம் புரிகின்ரு னருடசோதி
எனக்களித்தான் அந்தோ அந்தோ "
" சாதியும் மதமுஞ் சமயமுந் தவிர்ந்தேன்
சாததிரக் குப்பையுந தணந்தேன்
நீதியும் நிலையுஞ் சத்தியப் பொருளும்
நித்திய வாழ்கையும் சுகமும்
ஆதியும் நடுவும் அநதமும் எல்லாம்
அருட் பெருஞ் சோதியென் றறிந்தேன்
ஓதிய அனைததும் நீயறிந ததுநான
உரைபபதென் அடிக்கடி யுனக்கே "

என்று தமது நெறியை உணர்த்திஞர் வள்ளலார். இவர் கண்ட நெறி உலக முழுமைக்கும் உரிய நெறி. அவர்கண்ட நெறி நாடு, மொழி, இனம் முதலிய வேற்றுமைகளை ஒழித்து ஒற்றுமைப் பாட்டைத் தூண்டும் நெறியாகும்.

" அருட்பெருஞ்சோதி தனிபபெருங்கருணை "

---

பொல்லாத இச்சை புறத்தில் உழல்விக்கும் ;
நல்ல அருள்வேட்கை, நலமுணர்த்து கின்றதரோ.

BREATHE AND BUILD

To breathe, is to live, and where there is no breath there is no life, The air we breathe in, is full of life. The life essence is drawn from the air we breathe in Thus, air is full of life, and the great void of the atmosphere round the earth is equally full of life. The body man owns, is built of this life-ocean around him. When the body ceases to breathe from the ocean of life around, man is said to be dead. Thus man breathes and builds his body—his life.

But the body is not all that a man is. He has a spirit, the soul within. What though the body lives, if his souf be dead! The problem of life will be solved if a living soul inhabits a living body. How to build the life of the soul? Even here, there is an All-Soul which fills the entire cosmos. It is God. He is all-pervading. He fills the entirety of creation. In this condition He is said to be immanent To make him manifest, is a great work. In His immanent condition, He is not perceivable to the senses. If you can make him manifest, you can see Him in His play. The Lord at play is Sri Nataraja. The Lord in repose or the immanent God is Sri Padmanabha, Ranganatha or Narayana lying on the bed of Sri Audisesha. Through breath again you can

rouse him to action. For he is within you. Weave your breath around His thought. Thereby a dead soul is converted into a living soul.

The constant breath makes the continuous life of the body. Even so, the constant thought of the Lord within, makes for you the living soul.

The might of breath is illustrated in the pneumatic tyres which sustain untold weightage in the modern industrial civilisation. What is breath for the body, that is thought for the soul. With the constant thought of the Lord, you can sustain the weight of the cosmos. Give the breath to the Lord by singing His great name. Give the meditative thought to Him and put life into the soul. He who can combine both will be blessed with a living body and a living soul, each sustaining the other. Sing heartily. Live soulfully. Breathe and Build. —*Thiruppugal Mani.*

---

**அமிர்தவசனி சந்தாதாரர்கட்கு வேண்டுகோள்**

சித்திரைமீ முதல் பங்குனி முடிய வருடசந்தா உள்நாட்டிற்கு ரூ. 3. பணம் முன்னதாக அனுப்பவும். வி பி. இல்லை.

இலங்கைக்கு நான்கு வருட சந்தா ரூ. 14. அனுப்பவும். வி. பி. இல்லை.

மலேயா, ஆப்பிரிக்கா, மற்ற நாடுகளுக்கு நான்கு வருட சந்தா 30 ஷில்லிங்குகள், போஸ்டல் ஆடராக அனுப்பலாம்.

சித்திரை மாதத்திற்கு முன்னதாகவே சந்தாத் தொகையை அனுப்பினால் தொடர்ந்து பத்திரிகை கிடைக்கும். வருட நடுவில் சந்தாச செலுத்தினால், சித்திரைமீ முதல் வந்த முன் இதழ்கள் கிடைக்கக் கூடுமாயின், சந்தாத தொகையைப பெற்றுக் கொள்வம்.

**அமிர்தவசனி 54, பந்தர் தெரு, சென்னை.**

உலகம் யாவும் படைத்தவனை, உகந்தெவ்வுலகம் புரப்பவனை,
இலகும் உயிருள் கலந்தவனை, எங்கும் நீப்பின்றி இருப்பவனை,
நிலவும் அயிலைப் பிடிப்பவனை, நிகரில் சிகண்டி ஊர்பவனை,
உலவா எங்கள் உத்தமனை, உள்ளத்துள்ளே வைத்தேனே!

No1506
No 1505

# Coffee
## Ours for Quality

RAW, ROAST OR GROUND

**GANESH & CO., (MADRAS) PRIVATE LTD.**

**MADRAS.**

நம்பிக்கைக்கும் நாணயத்திற்கும் உங்கள்
நன்மதிப்புப் பெற்ற நகை வியாபாரிகள்

**சுவர்ண மாளிகை**

**A. S. S. M. சோமசுந்தரம் செட்டியார் & Co.**

தங்க நகைகள், வெள்ளிப பாத்திரங்கள் வியாபாரம்.

124, தெற்காவணி மூலவீதி :: மதுரை

Tel: "FAITH" Estd: 1924. Phone: 2113




**குடை மார்க் பினாயில்**

(சிறந்த கிருமி நாசினி)

தயாரிப்பாளரும், விநியோகஸ்தரும்

**ஸ்பிரிட் வேர் ஹவுஸ்**

49, சைடன் ஹாம் ரோடு

சென்னை-3.

டெலிபோன்: 33982


**அமிர்தவசனி சந்தாதாரர்கட்கு வேண்டுகோள் :**

பங்குனி மாதத்துடன் உங்கள் வருட சந்தா முடிவடைகிறபடியால், தயை கூர்ந்து குரோதி வருஷ சந்தாத் தொகையை அனுப்பும்படி ஞாபகப் படுத்துகிறோம். வி. பி. யில் அனுப்ப இயலவில்லை.

அமிர்தவசனி காரியாலயம் 54, பந்தர் தெரு, சென்னை-1. போன்: 22594

Printed by V. Thirunavukarasu at the Rathnam Press (Branch)
65 Tirupalli Street Madras 1
[illegible]